விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 10 செவ்வாய்க்கிழமை (26.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சமாதானத்திற்கான போரில் அரசாங்கம் தோற்றுவிட்டது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரில் அரசாங்கம் வெற்றி பெற்றிருந்தாலும் சமாதானத்திற்கான போரில் இதுவரை அரசாங்கம் வெற்றி பெறவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற முன்னாள் நீதியரசர் கே.பாலகிட்ணர் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு அதிக பாதுகாப்பு

(கொழும்பு)

நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதைத் தடுப்பதற்காக அவருக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் நேற்று ஆஜர்ப்படுத்துவதற்காக (20ஆம் பக்கம் பார்க்க)

## நாம் இலங்கையரா?

## சனல் 4 வீடியோ பார்த்த சந்திரிகாவின் மகன் ஆதங்கம்

(கொழும்பு)

பிரித்தானிய தொலைக்காட்சியில் இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்தை பார்த்த 28 வயதான தனது மகன் தான் ஓர் இலங்கையர் எனவும், பௌத்தர் எனவும் கூறுவதற்கு வெட்கப்படுவதாக கூறினார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கையினது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நிகழ்த்திய, முன்னாள் நீதியரசர் கே.பாலகிட்ணர் நினைவுச் சொற்பொழிவின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி உள்ளடக்கிய சமூகங்கள் மற்றும் சமாதானம் என்ற தலைப்பில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதான உரையாற்றினார்.

28 வயதான எனது மகன் பிரித்தானிய தொலைக்காட்சியில் பார்த்த பின்னர், தான் ஓர் இலங்கையர் எனவும் பௌத்தர் எனவும் கூறுவதற்கு வெட்கப்படுவதாக எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்த காலை வேளையை நான் எனது வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன்.

எனது மகளும் இதேபோன்ற கருத்தைத் தெரிவித்தார். எமது நாட்டவர்கள் இத்தகைய பயங்கர நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்பது குறித்து அவர் அதிர்ச்சியையும், அச்சத்தையும் வெளிப்படுத்தினார்.

எனது மகனும், மகளும் மற்றவர்களை கவனித்துக் கொள்கிறார்கள் என்பது குறித்து நான் பெருமை அடைகின்றேன். அவர்கள் தமது தந்தை, தாய் விரும்பியபடியான மனிதர்களாக வளர்ந்துள்ளார்கள் என்பது குறித்து நான் பெருமை அடைகின்றேன் என உணர்ச்சி வசப்பட்டவராக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார். (எ)

## மக்கள் வாக்களிக்கச் சென்றதே எமக்குக் கிடைத்த வெற்றிதான்!

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்கள் தங்கள் வாக்களிப்பு உரிமையை வீணாக்காது வக்குசாவடிகளுக்கு வந்ததே மஹிந்த சிந்தனை மூலம் ஜனநாயகம் பெற்றுக்கொண்ட வெற்றி என அம்பாந்தோட்டை பாராளுமன்றஉறுப்பினர் நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தோடு பல வருடங்கள் அனுபவிக்க முடியாது இழந்து போயிருந்த உரிமையை வடக்கு மக்கள் தற்போது சுதந்திரமாகவும் பூரணமாகவும் அனுபவிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு பயந்திருந்த மக்கள் தமக்கு கிடைத்த ஜனநாயக உரிமையை உச்சளவில் பயன்படுத்தியுள்ளனர். எனவே அதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ)

## உள்ளூராட்சி சபைக்கு தெரிவானோருக்குப் பயிற்சி

(கொழும்பு)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றோரில் அதி கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களுக்கே தலைவர் பதவிகள் வழங்கப்படும் என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளருமான சுசில் பிரேமஜயந்த கூறினார்.

விருப்பு வாக்குகள் தொடர்பான விபரங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## சீமானை கைது செய்ய பொலிஸில் முறைப்பாடு

(சென்னை)

தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜா சென்னையில் பொலிஸ் கமிஷனரை சந்தித்து நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது,

இயக்குநர் சீமான் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்தும், சோனியா, ராகுல் ஆகியோரை விமர்சித்தும் தொடர்ந்து பேசி வருகிறார். ஏற்கெனவே அவர் மீது புகார் செய்தோம். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து கைதுசெய்ய வேண்டும் என்று அந்தமனுவில் கூறியுள்ளார்.

அவருடன் (20ஆம் பக்கம் பார்க்க)

QATAR
Rs. 18/-
IDD Per Minute Package
#678# க்கு டயல் செய்து நுழைந்திடுங்கள் அல்லது IDDMIN என டைப் செய்து 678 க்கு SMS செய்யுங்கள்
Dialog

## சிங்கள மக்களுக்கு இணையாக வாழ தமிழ் மக்கள் விரும்புகின்றனர்

### தேர்தல் முடிவை சுட்டிக் காட்டுகிறார் மனோ



(கொழும்பு)

இந் நாட்டில் சிங்கள மக்களுக்கு இணையான வாழ்க்கை எங்களுக்கு வேண்டும். நீங்களும் வாழுங்கள், எங்களையும் எங்கள் மண்ணிலே நிம்மதியாக வாழவிடுங்கள் என்ற எளிமையான செய்தியைத் தான் உறுதியான முறையிலே வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கின்றார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்., கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டுள்ள தேர்தல் வெற்றிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாரிய அரச வளங் (20ஆம் பக்கம் பார்க்க)

## மிகிந்தலைக்கு ஜனாதிபதி பயணம்

(மிகுந்தலை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் மிகிந்தலை ரஜமஹா விகாரைக்கு விஜயம் செய்தார். அங்கு பல மதகுருக்களை சந்தித்த ஜனாதிபதி மிகிந்தலை அபிவிருத்தி தொடர்பிலும் அவதானம் செலுத்தினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் அமைக்க வாக்கெடுப்பு; சர்வதேசத்திடம் வைகோ கோரிக்கை



(சென்னை)

எரித்திரியா ,கிழக்குத் திமோர்,தெற்கு சூடான் ஆகிய பகுதிகளில் தனி நாடு அமைப்பதற்கு அம்மக்களிடையே வாக்குப்பதிவு நடத்தி புதிய நாடுகளை அமைத்துக் கொடுத்த ஐக்கிய நாடுகள் சபையும், உலக நாடுகளும் தமிழ் ஈழத்தை அமைப்பதற்காக தமிழீழ மக்களிடம் பொது வாக்குப்பதிவை நடத்த வேண்டும் என ம.தி.மு.க பொதுச் (20ஆம் பக்கம் பார்க்க)

வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

## அமெரிக்க யுவதியின் முகத்தில் துப்பிய இளைஞன்

கொள்ளுப்பிட்டியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் வைத்து இலங்கை இளைஞர் ஒருவர் தனது முகத்தில் துப்பியதுடன் தன்னை அவமதித்த தாக அமெரிக்க யுவதியொருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸில் புகார் செய்துள்ளார். மாணவியான தான் சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வந்ததாகவும் மேற்படி இளைஞர் சுமார் 25 வயதானவராக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக் கமெரா மூலம் சந்தேக நபரை தாம் இனங்கண்டுள்ளதாக கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜெயரட்ணவிடம் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணை நடத்தி ஜுலை 28ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஏ)

FINANCIAL SPONSORSHIP

UK, USA, Canada, Australia

போன்ற நாடுகளில் கல்வி கற்பதற்கு

SPONSORSHIP

பிரச்சினையா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

VTL மெனேஜ்மென்ட் சேர்விஸ் (பிரை) லிமிடெட்,
இல.1, டீன்ஸ்டன் ஹவுஸ்,
டீன்ஸ்டன் பிளேஸ், கொழும்பு 3.
072-9994777/011-7902938

# இலங்கை இரண்டாக பிரிந்திருப்பதை தேர்தல் முடிபு வெளிப்படுத்தியுள்ளது

## சர்வதேச ஊடகங்களில் செய்தி

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்ற பெருவெற்றி தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து செய்திகளை வெளியிட்டுள்ள நியூயோர்க்ரைம்ஸ், த இண்டிபென்டன் மற்றும் பி.பி.சி போன்ற சர்வதேச ஊடகங்கள் இத் தேர்தலில் வடபகுதியில் வெற்றி பெறுவதற்காக அரசாங்கம் மேற்கொண்டிருந்த கடும் முனைப்புக்கள் குறித்தும் சுட்டிக் காட்டியுள்ளன.

அரசாங்கத்திற்கு எதிராக போர்க் குற்றசாட்டுக்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் இத்தேர்தல் பேரும் முக்கியத்துவம் பெற்றிருந்ததாக இவ்வூடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை என்ற தேசம் இரண்டாக பிரிந்திருப்பதை இத் தேர்தல் முடிபுகள் வெளிப்படுத்தியிருப்பதாக நியூயோர்க் ரைம்ஸ் எனும் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோன்று இத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அரசாங்கம் வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்ததுடன் அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டிருந்தது. ஆனால் தமிழ் மக்கள் தாங்கள் இன்னும் ஒடுக்கப்படுதாக கருதுவதையே அவர்கள் அளித்த வாக்குகள் வெளிப்படுத்தியுள்ளதாக த இன்டி பென்டன் எனும் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மறுபுறத்தில், இனப்பிரச்சினை என்பது இலங்கையில் இன்னும் ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை இத்தேர்தல் முடிபுகள் வெளிப்படுத்தியுள்ளதாக பி.பி.சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# உலகின் 194ஆவது நாடாக ஈழத்தை அறிவிக்க வேண்டும்

## இராமதாஸ் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கை உள்ளூராட்சித் தேர்தல் முடிபுகள் தனித் தமிழீழத்திற்கான தீர்ப்பு என்று பா.ம.க. நிறுவுனர்டாக்டர் இராமதாஸ் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது.

வடக்கு மாநிலத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இலங்கைப் படையினர் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர்.

ஆளும் கட்சியினர் சார்பில் வாக்காளர்களுக்கு பணந்தரப்பட்டது. இவற்றையெல்லாம் மீறி வடக்கு மாநிலத்தில் மொத்தமுள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளில் 17 இடங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வென்றுள்ளது. அதுமட்டுமின்றி பதிவான வாக்குகளில் 75 வீதத்திற்கும் அதிக வாக்குகளை கூட்டமைப்பு பெற்றுள்ளது.

இதன் மூலம் ராஜபக்ஷ தலைமையிலான அரசு மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையும் தங்களுக்கென தனித் தமிழ்த் தலைமை தேவையென்பதையும் ஈழத் தமிழர்கள் உணர்த்தியிருக்கின்றனர்.

இதைத் தனித் தமிழீழம் அமைவதற்கான கருத்துக் கணிப்பு முடிபாக உலக நாடுகள் கருதவேண்டும். இலங்கையில் சிங்களவர்கள் வாழும் பகுதிகளை பொறுத்தவரை தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இராஜபக்ஷ கட்சிதான் பெரும்பாலான இடங்களை கைப்பற்றியுள்ளது.

இதன் மூலம் இலங்கையில் தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பே இல்லை என்பது இன்னொரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

கிழக்குத் தீமோர், தெற்குச்சூடான் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக உலகின் 194ஆவது நாடாக தமிழீழத்தை அறிவிக்க ஐ.நா. நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்றுள்ளது. (எ)

கண்ணீர் அஞ்சலி



சின்னத்தம்பி கந்தசாமி (கப்பல்)

பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சிறிதுகாலம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி அவர்கள் நேற்று (25.07.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் ஸ்கந்தபுரம் ஸ்ரீ நடனமுத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணிக்காக அரும்பாடுபட்டு எமது ஆலய வளர்ச்சிக்கு துணையாக இருந்து பெரும் பங்காற்றியவர். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ நடனமுத்துமாரி அம்பாள்
ஆலய அறங்காவலர் சபையினரும்,
ஸ்கந்தபுரம் வாழ் மக்களும்.

(5547)

தேவை

யாழ் நகருக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றின் சிறிய வளவைத் தினமும் துப்புரவு செய்ய (அரைமணி நேர வேலை) வேலையாள் தேவை.

தொடர்பு : 0773663986

(5548)

வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை மேற்கில், கொழும்புத்துறை வீதி கணக்கர் சந்திக்கருகாமையில் உள்ள 3 பரப்பளவுடைய 3 கடைத்தொகுதியும் அதன்பின்னால் நல்ல நிலையிலுள்ள வீடும் வெற்றுக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : குமார்
0750403027

(5533)



சிவபார்வதி ஜோதிட நிலையம்

பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொர்.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

சண் ஜெய உணவகம் (மேல்மாடி)

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை

கட்டணம் ரூபா 101/-

(5540)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்-சாவகச்சேரி பிரதேசசபை

இலங்கை தமிழரசுக் கட்சி முதன்மை வேட்பாளர்

திரு.சிற்றம்பலம் துரைராசா அவர்கள்

வழங்கும் நன்றி அறிதல்



நான் உங்களிடம் வந்தபோது அன்போடும் மதிப்போடும் இன்முகத்தோடும் வரவேற்று ஆதரவு தந்தது மட்டுமன்றி யாழ்.மாவட்டத்திலேயே அதிகூடிய விருப்பு வாக்குகளாக 6520 வாக்குகளைப் பெற்று முன்னணியில் திகழச் செய்ததுடன் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் முழு ஆதரவு தந்து வாக்குகளை வழங்கிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் அஞ்சல் வாக்களிப்பு மூலமும் அதிகூடிய வீதமாக 75 வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளாக 418 அஞ்சல் வாக்குகளை வழங்கிய அனைத்து அஞ்சல் வாக்காளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.சி.துரைராசா

(5546)

# இன்று ஒரு தகவல்

## அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன்

"பார்த்தசாரதி" என்றால் என்ன அர்த்தம்?

பார்த்தனுக்கு சாரதி. அதாவது, அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன் என்ற பொருளில் பார்த்தசாரதி என்ற சொல் வழங்குகிறது.

அது கண்ணனைக் குறிக்கிறது – இது நமக்குத் தெரியும்.

இந்தக் கண்ணன் அர்ஜுனனுக்கு இரண்டாவது பார்த்த சாரதிதான்.

அப்படியென்றால், "முதல் பார்த்தசாரதி" என்று ஒருவர் உண்டா?

உண்டு!

கண்ணனுக்கு முன்னாலேயே அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன் ஒருவன் உண்டு.

அவன் பெயர் உத்தரகுமாரன்.

அவன் விராட தேசத்தின் இளவரசன்.

அப்போது பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

'பாண்டவர்கள் விராட தேசத்தில்தான் இருப்பார்கள்!' என்று துரியோதனன் ஊகிக்கின்றான்.

அவர்களை வெளிப்படுத்துவதற்காக அவன் சில முயற்சிகளைச் செய்கின்றான்.

தன்னுடைய சேனைகளையெல்லாம் துரியோதனன் அழைத்துக்கொண்டு போய், விராட நாட்டிலுள்ள பசுக்களையெல்லாம் ஓட்டிக்கொண்டு போகிறான்.

அந்த நேரத்தில் சிராடன் வேறு ஒரு திசையில் போர் செய்வதற்குச் சென்றிருந்தான். அவனுடைய மகன் உத்தரகுமாரன் – பயந்தாங்கொள்ளி!

அவன் கத்தியைப் பார்த்தாலே மிகவும் பயப்படுவான். அவன் எங்கே, எப்படி சண்டை போடுவான்?

இருந்தாலும் அவனுக்கு இப்போது வேறு வழியில்லை.

அப்பா ஒரு பக்கம் போயிருக்கிறார். இவன் இன்னொரு போர்முனைக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருந்தான்.

இந்தச் சமயத்தில் அங்கிருந்த அர்ஜுனன் உத்தரகுமாரனுக்கு உதவி செய்ய வருகிறான்.

எப்படி?

அதாவது பேடி உருவத்தில் இருக்கும் அர்ஜுனன், உத்தரகுமாரனுக்கு சாரதியாக அமைகிறான்.

போர்முனைக்குப் போய்ச் சேர்ந்ததும் உத்தரகுமாரன் தேர் ஓட்டுகிறான். அர்ஜுனன் கௌரவ சேனைகளை விரட்டியடிக்கிறான். அதனால் கௌரவர்கள் அனைவரும் புறமுதுகிட்டு ஓடிப்போகிறார்கள்.

அதன் பிறகு ஊருக்குத் திரும்பும் போது... அர்ஜுனன் மறுபடியும் 'பேடி உருவம் எடுத்துக்கொண்டு தேர் ஓட்டிக் கொண்டு வருகிறான். அப்போது உத்தரகுமாரன் தேரில் உட்கார்ந்திருக்கிறான்.

பார்க்கிறவர்கள் அனைவரும், 'உத்தரகுமாரன்தான் கௌரவர்களை முறியடித்துவிட்டு வருகிறான்! என்று நினைத்து அவனைப் பாராட்டுகிறார்கள்.

அர்ஜுனனும், "நான் சண்டை போட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். இந்த இரகசியம் நமக்குள் இருக்கட்டும்" என்று உத்தரகுமாரனிடம் கூறிவிடுகிறான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்கும் உத்தரகுமாரனுக்கு "போரில் வெற்றி பெற்றான்!" என்ற பேரும் புகழும் எப்படி வந்தது?

"அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை என்று ஓர் ஆன்மீகப் பேச்சாளன் கூறினார்.

'ஸ்தானத்தின் மகிமை – அதாவது இடத்தின் மகிமை!' இங்கு எப்படி என்று கேட்டால்...

உத்தரகுமாரன் சிறிது நேரம் உட்கார்ந்து தேர்ஓட்டினானே, அந்த இடத்தின் மகிமைதான் அவனுக்குப் பெருமையைச் சேர்த்துக் கொடுத்தது.

அது 'சீட்டு'க்கு உள்ள பெருமை. பிற்காலத்தில், ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்தப்போகும் 'சீட்' இல்லையா அது? அந்த சாரதி ஸ்தானத்தில் உத்தரகுமாரன் முன்பே உட்கார்ந்தான். அதனால் அவனுக்கு அத்தனை பெருமை கிடைத்தது.

ஒரு நாற்காலிக்கு மதிப்பு அதில் உட்காருகிறவர்களைப் பொறுத்துத்தான் ஏற்படுகிறது. "இதோ இருக்கிறதே... இது இன்னார் உட்கார்ந்த நாற்காலி!" என்று இப்போதும் நாம் சொல்லிக்கொள்கிறோம் அல்லவா?

நாம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தால்... அந்த நாற்காலி ஏற்கனவே வாங்கி வைத்திருக்கும் பெருமையைக் காப்பாற்றும் அளவுக்கு அதில் நாம் உட்கார வேண்டும்!

அதுதான் நமக்கும் நல்லது... நாற்காலிக்கும் நல்லது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்ப்பாணத்தில் நடமாடும் சுற்றுலா சேவை எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சுற்றுலாசேவை எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் மரிய தாஸ்கிசோ அன்ரன் தெரிவித்துள்ளார்.

இவ் நடமாடும் சுற்றுலாசேவையில் ஹோட்டல்கள், விருந்தினர் விடுதி, உணவகங்கள் மற்றும் பிரயாண முகவர்கள் அனைத்தும் பதிவு செய்தலும் அனுமதிப்பத்திரம் வழங்குதலும் தேசிய மற்றும் நடமாடும் விரிவுரைகள், பிராந்திய மற்றும் பகுதிகளுக்கான விளக்கமளித்தல் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் ஆகியவை இடம் பெறவுள்ளன.

அத்தோடு மூலதனமிடுவோருக்கான அறிவுரைச் சேவைகள், சிறிய மற்றும் மத்தியதரப் பிரிவு மூலதனமிடுவோருக்கான பயிற்சித் திட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டங்கள் ஆகியவையும் இடம் பெறவுள்ளன.

இதேவேளை 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு சுற்றுலாத்துறை சார்ந்த நன்மைகளும் தொழில் வாய்ப்புக்களும் என்னும் கருப் பொருளில் பயிற்சிப் பட்டறையொன்றும் இங்கு இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஹொட்டல்களில் பணிபுரியும் ஊழியர்கள் பங்குபற்றவுள்ளனர்.

ஒவ்வொரு ஹொட்டல்களிலிருந்தும் 4 பேர் வீதம் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ள முடியும். அது மட்டுமன்றி தென்னிலங்கையிலிருந்து 20 மேற்பட்ட பத்திரிகையாளர்களும் பங்குபற்றவுள்ளனர்.

சுற்றுலாத்துறையில் பணிபுரிபவர்கள், ஹோட்டல்களில் பணிபுரிபவர்கள் தமது தொழில் விருத்திக்காக கடன்கள் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் இதில் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுலாத்துறை தொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் 12.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்திலுள்ள 400க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து பயன் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-6)

# உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்) பதவி வெற்றிடமாகவுள்ளது. இதற்கு ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடைய இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, 2.I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட பாடத்தில் 3 வருடத்திற்கு குறையாத கற்பித்தல் அல்லது செயன்முறை அனுபவமுடைய பட்டதாரியாக அல்லது இதற்கு சமமான தரமுடையதான தொழில் சார் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். இப் பதவிக்கு யாழ்.மாவட்டப் பாடசாலையைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம். இ.ஆ.சே.I இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.ஆ.சே.2.I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை வலயக்கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக் குமாறு வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 20 | 30 |
| உருளைக்கிழங்கு | 85 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 70 |
| தக்காளி | 40 | 30 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 40 | 50 |
| கரட் | 50 | 50 | 40 |
| பூசணி | 25 | 15 | 25 |
| புடோல் | 35 | 20 | 40 |
| வாழைக்காய் | 40 | 15 | 35 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 80 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 35 |
| பாகற்காய் | 70 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 100 |
| பயற்றங்காய் | 60 | 30 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 50 | 25 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 50 | 80 | 80 |
| போஞ்சி | -- | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 15 | 10 | 15 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 30 | 40 |

# இராசி பலன்

*26.07.2011*
*(ஆடி 10, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*ஏகாதசி பின்னிரவு 2.28மணிவரை*
*ரோகிணி முழுவதும்*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*
*இரண்டாம் ஆடிச் செவ்வாய்,*
*ஏகாதசி விரதம்.*

**மேடம்** இனிமையான செய்திகள் இல்லம் தேடி வரலாம், உத்தியோக நன்மையுண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழும் நாள்.

**இடபம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரெனச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**மிதுனம்** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் கூடுதல் பொறுப்புக்களால் பம்பரமாக சுழன்று பணிபுரிய வேண்டிய சூழ்நிலை அமையலாம், பயணங்களால் சஞ்சலமடைவீர்கள்.

**கடகம்** பணவரவு திருப்தி தரும் நாள், உத்தியோக உயர்வுண்டு, உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

**சிங்கம்** சிறப்பான நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், தொழில் முன்னேற்றப்பாதையை நோக்கி செல்லும், பிறர் உதவியுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**கன்னி** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் விலகும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**துலாம்** சஞ்சலங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக் கூடிய வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள், கஷ்டப்பட்டு பணி புரிந்ததற்கேற்ப இன்று பலன் கிடைக்கும், தொழிலில் புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், கௌரவமான நாள், தடைகள் அகன்று காரியங்கள் நடைபெறும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், மாற்றினத்தவர்களின் உதவியால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளின் உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், தாய் வழி ஆதரவு கிடைக்கும், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், பிரயாண நன்மையுண்டு.

வளவன்

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு வாகனம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பாவனையிலிருந்த பஜரோ ரக வாகனம் ஒன்று நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதி ராஜாவுடம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இந்த வாகனம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமாலை இடம்பெற்றது.

இதில் யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடமிருந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராஜா மற்றும் வைத்தியகலாநிதி ரவிராஜ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (ஸ்ரீ-6)

# தெல்லிப்பழையில் புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிலையம்

## நாளை அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேசத்தில் புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் என புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான முற்றுமுழுதான புற்று நோய் சிகிச்சை பிரிவினை நிர்மாணிப்பதற்காக தேவைப்படும் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்டுவதுடன் புற்று நோய்க்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடைபயணம் இடம்பெற்று வருகிறது.

கடந்த ஜூலை முதலாம் திகதி தெய் வேந்திரமுனையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபயணம் நேற்று முன்தினம் கொடிகாமத்தை வந்தடைந்தது. நேற்றுகாலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியை வந்தடைந்தனர்.

இந்த நடைபயணத்தின் இறுதி இலக்கான பருத்தித்துறை வெளிச்ச வீட்டிற்கு நாளை புதன்கிழமை இவர்கள் செல்லவுள்ளனர்.

அன்றைய தினம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள 2.5 ஏக்கர் காணியில் இந்த புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான பணி ஆரம்பித்து வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# குளவிக் கொட்டியதில் காயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(மருதங்கேணி)

குடத்தனைப் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இதில் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த கந்தையா-யோகராசா(வயது-46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த நபர் சீவல் தொழிலுக்காக மரத்தில் ஏறிய வேளை குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அருகில் இருந்தவர்களால் உடனடியாக கொண்டு செல்லப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அன்றைய தினம் அவர் உயிரிழந்துள்ளார். (ஸ்ரீ-35)

# காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் பல மில்லியன் ரூபா நிதியுதவியில் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந் நிகழ்வுக்கு இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் பிரதம அதிதியாக கலந்து கொண்டு துறைமுக அபிவிருத்தியை ஆரம்பித்து வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2-4)

## ஆடிஅமாவாசை தினத்தன்று ஊழியர்களுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகத் தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆடி அமாவாசைத் தினத்தன்று சகல வர்த்தக நிலையங்களிலும் கடமையாற்றும் வர்த்தக ஊழியர்கள் தமது கடமைகளைச் செய்வதற்கு விடுமுறை வழங்க வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வலி.கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட ஐந்து வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட 5 வீதிகளை புனரமைக்க வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி செ.சோமராஜ் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதனடிப்படையில் அச்சுவேலி சந்தை உள்ளக வீதி, கோப்பாய் சரவணபவானந்தா பாடசாலை வீதி, கோப்பாய் கொட்டைக்காடு மயானவீதி, உரும்பிராய் சிவன் கோயில் வீதி, நீர்வேலி வீரபத்திரர் சனசமூக நிலைய வீதி ஆகிய 5 வீதிகளுமே புனரமைக்கப்படவுள்ளன.

இவ்வீதிப் புனரமைப்புக்கான வேலைத்திட்டங்கள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-10)




## பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்கள் மற்றும் தென்மராட்சி தீவக வலயங்களைச் சேர்ந்த க.பொ.த(உ/த)பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இதில் மேற்படி பரீட்சைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.கல்வி வலயப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தெய்வீக இசைவிருந்து

(யாழ்ப்பாணம்)

உலகப்புகழ் பெற்ற பிரபல இந்திய பாடகரும் பகவான் பாபாவின் பக்தருமான ஸ்ரீ ரவிராஸ் நசேறி வழங்கும் தெய்வீக இசை விருந்து எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். திருநெல்வேலி சேர்.பொன் இராமநாதன் வீதி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ)

# மானிப்பாய் இந்து,ஸ்கந்தவரோதயா இருமொழி மூலப் பாடசாலைகள்

## கல்வியமைச்சு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கல்வி வலயத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலப்பாடசாலைகளாக இரண்டு பாடசாலைகளை கல்வியமைச்சு அங்கீகரித்துள்ளது.

இதற்கமைய மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவை இருமொழி மூலக் கல்விப் பாடசாலைகளாக இயங்கவுள்ளன.

புதிய நடைமுறைக்கமைய இப்பாடசாலைகளில் தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்மொழி கற்பித்தலுடன் ஆங்கிலமொழிக் கற்பித்தலும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)








இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. கிழக்கு கோப்பாய் பிரிவின் செஞ்சிலுவைத் தொண்டர்கள் கௌரவிப்பு விழா கோப்பாய் பிரிவு அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் உபதலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா சிறப்புரை நிகழ்த்துவதையும் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் உரையாற்றுவதையும் யாழ்.மாவட்டக்கிளையின் தலைவர் பேராசிரியர்வி.கே.கனகலிங்கம் தொண்டர் ஒருவருக்கு விருது வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)

# இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் வடபகுதி மாணவர்கள் அதிகரிப்பு

## பரீட்சை ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

வட பகுதியில் அமைதி நிலவுவதால் இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதல் தடவையாக இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 94 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர். இவர்களுள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 90 ஆயிரமாகும்.

கடந்த 2008 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 57 சதவீதத்தினர் உயர் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றமையும் வட பகுதியில் அமைதி நிலவுவதால் கிளிநொச்சி – முல்லைத்தீவு– மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகமானவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளமையும் இந்த நிலைக்கு காரணமாகும்.

இவர்கள் அனைவருக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நேற்று தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கும் க.பொ.த. உயர் தரப் பரீட்சை செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி முடிவடையும் எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# பூநகரி பிரதம தபாலக கட்டடத்தை விரைவில் அமைத்து தருமாறு கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதம தபால் நிலைய கட்டடம் பல மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்கான வேலைத் திட்டம் ஒருவருடத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த வேலைத்திட்டம் கடந்த காலங்களில் மந்தகதியில் நடைபெற்ற போதும் பின்னர் இவ் வேலைத் திட்டம் சிறிது காலம் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒருமாதத்திற்கு முன்பு மறுபடியும் ஒப்பந்தகாரரினால் ஆரம்பமாகிய இவ் வேலைத்திட்டம் கூரை வேலை வரை நடைபெற்று மீண்டும் அசமந்தப்போக்கு காரணமாக வேலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பாலத்தில் ஊழியர்களும் தபாலதிபரும் மற்றும் உபதபாலதிபரும் தனியார் வீடொன்றின் அறையில் பெரும் சிரமத்தின் மத்தியில் இத் தபால் நிலையத்தை இயக்கி வருகின்றனர்.

எனவே உரிய திணைக்கள அதிகாரிகள் ஒரு வருட காலமாக இழுபறியும் இவ்வேலைத்திட்டத்தை சீரான முறையில் விரைவாக முடித்து உதவ வேண்டுமென அப்பகுதி வாழ் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-2-84)

# பொன்சேகாவுக்கு மேலதிக மின்விசிறி பயன்படுத்துவதற்கு அனுமதி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மேலதிகமாக இன்னுமொரு மின்விசிறி வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று பணித்தது.

வெள்ளைக் கொடிகளை பிடித்துக் கொண்டு பாதுகாப்பு படையினரிடம் சரணடைய வருபவர்களை கொல்லுமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை பணித்தார் என சரத் பொன்சேகா சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியையான பிரெட்ரிக்கா ஜான்னிடம் கூறியதாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சரத் பொன்சேகாவின் மார்பு நோய் வைத்திய நிபுணர் நிரோஷனா பெரேரா சரத் பொன்சேகாவின் மார்புநோய் தூசி காரணமாக ஏற்பட்டது என கூறியுள்ளதாகவும் வாயு சீராக்கி ஒன்றை பயன்படுத்துமாறு அவர் சிபார்சு செய்துள்ளதாகவும் சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குறைந்தபட்சம் மேலுமொரு மின்விசிறியையாவது பயன்படுத்துமாறு சட்டத்தரணி வேண்டிக் கொண்டதையடுத்து நீதிமன்றம் அவருக்கு மேலதிக மின்விசிறி ஒன்றை பயன்படுத்த அனுமதிக்குமாறு சிறை அதிகாரிகளுக்கு பணித்தது. வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# புதிதாக தெரிவான உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சிகள்

புதிதாகத் தெரிவான 65 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு முறையான பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி மன்றச் சட்டங்கள், நடைமுறைகள், கேள்விப் பத்திர நடைமுறைகள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளல் போன்றவை இப்பயிற்சிகளில் உள்ளடங்கும் என உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக தெரிவான உள்ளூராட்சி உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல்கள் ஆணையாளரால் விசேட வர்த்தமானியொன்றின் மூலம் வெளியிடப்படவுள்ளது. அதன்பின் ஒரு மாதத்தில் புதிய உள்ளூராட்சி சபைகள் செயற்படத் தொடங்கும்.

65 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 875 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்தேர்தலில் கட்சிகள் பெற்றுக் கொண்ட உறுப்பினர்களின் விபரம் வருமாறு, ஐ.ம.சு.மு-512, த.தே.கூ-183, ஐ.தே.க.-137, ஜே.வி.பி.-13, த.வி.கூ.-12, ஸ்ரீலங்கா மு.கா-07, பிரஜைகள் முன்னணி-02, லங்கா சமசமாஜ கட்சி-01, சுயேட்சைக் குழு-08. (ஸ்ரீ-2-4)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெற்றி பெற்ற வீரர்கள் சான்றிதழுடன் நிற்பதையும் அருகில் அகில இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஆரம்பிப்பாளர் ரி.கருணாகரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.





கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

## பிம்சவிய திட்டம் ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காணிக்கான உரிமையை பதிவு செய்யும் திட்டமான பிம்சவிய திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## ஆட்டோ தடம்புரண்டதில் இளைஞன் படுகாயம்

(நவாலி)

நவாலி சின்னப்பா வீதிச் சந்தியில் ஆட்டோக்கள் இரண்டும் துவிச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதில் ஆட்டோ ஒன்று தடம்புரண்டதில் ஆட்டோவின் பின் இருக்கையில் இருந்த வே.விஜயகாந் (வயது 19) என்பவரே காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-26)

## வைகோ தயாரித்த ஆவணப்படம்

(கொழும்பு)

ஈழமண்ணில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை, தமிழினம் எதிர்நோக்கும் இன்னல்கள், தமிழீழ மண்ணின் வரலாறு என பல விடயங்கள் அடங்கலாக வைகோவால் ஆவணப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள் ளது.

இதற்கு ஈழத்தில் இனக் கொலை இதயத்தில் இரத்தம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவ் ஆவணப்படம் தமிழீழம் என்ன? அதன் வரலாறு என்ன? அதற்கு ஏற்பட்ட சோக சூழ்நிலை என்ன? எனப் பல அம்சங்களை உள்ளடங்கியுள்ளது. (ஸ்ரீ-2)

# புற்றுநோய் சிகிச்சை மையத்திற்கு நிதி சேகரிக்கும் நடைபவனி நாளை நிறைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தென்பகுதியான தெய்வேந்திர முனையிலிருந்து ஜுலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மகத்தான நடைப்பயணம் நேற்றைய தினம் காலை 8.30 மணியளவில் யாழ். நகரை வந்தடைந்தது.

இன்று அதிகாலை 4 மணிக்கு யாழ். நகரிலிருந்து புறப்படும் இந்த நடை பவனி வல்லைச் சந்தியை மாலை 6 மணியளவில் சென்றடையும். பின்பு நாளை காலை இறுதி இலக்கான சுமார் 685 கிலோ மீற்றர் தூரத்தை 27 நாட்கள் கடந்து பருத்தித்துறை வெளிச்ச வீட்டை அடையவுள்ளது.

இதேவேளை நாளை முற்பகல் 11 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கில் இந்த நடைபயணத்தில் பங்குபற்றியவர்களுக்கு கௌரவிப்பு வழங்கப்படவுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் கிரிக்கெட் பிரபலங்களும் பங்குபற்றவுள்ளனர்.

இலங்கையின் முன்னிலை ஆடை உற்பத்தி கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளான நாதன் சிவகணநாதன், சரிந்த உனம்புவினால் ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்சி கலர் ஒவ் கறேஞ்சின் அனுசரணையுடன் யாழ். மருத்துவமனையில் சிறுவர்களுக்கான முற்றுமுழுதான புற்றுநோய் சிகிச்சைப் பிரிவினை நிர்மாணிப்பதற்காக தேவைப்படும் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்டுவதும் புற்றுநோய்க்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே இப்பயணத்தின் நோக்கமாகும்.

வட இலங்கையில் இருந்து நோயைச் சுமந்து கொண்டு மகரகம மருத்துவமனைக்கு தமக்குத் தேவையான சிகிச்சையினை அடிக்கடி நாடும் மக்கள் தொகையை நாம் காண்கின்றோம். சிகிச்சைக்காக சிறு பிள்ளைகளை சுமந்து கொண்டு பெற்றோர்கள் நீண்ட



கடினமான பயணத்தினை அடிக்கடி செய்ய வேண்டியுள்ளது. இதனால் பெரும் இழப்புக்களையும் களைப்புகளையும் அவர்கள் சந்திக்க நேரிடுகிறது. நீண்ட நாட்களுக்கு தமது பிள்ளைகளை மருத்துவமனைகளில் வைத்திருக்க வேண்டியும் ஏற்படுகிறது.

இதனால் அந்தப் பிள்ளைகள் தமது சகோதரர்களிடம் இருந்தும் நண்பர்களிடமிருந்தும் பிரிக்கப்படுகிறார்கள். ஏன் பாடசாலைகளிலிருந்தும் விடுபட்டுப் போகிறார்களல்லவா? மற்றவர்களுக்கு கிடைக்கும் வசதிகள் புற்றுநோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் வட பகுதி சிறார்களுக்கு கிடைக்காத காரணத்தினால் மென்மேலும் அவர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். இதனால் தான் யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கான புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு ஒன்றின் தேவைப்பாடு எல்லோரினாலும் உணரப்பட்டுள்ளது. இலாப நோக்கற்ற சமூக அமைப்பான கலர் ஒவ் கறேஞ்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடை பயணம் தெற்கிலிருந்து வடக்கிற்கு கட்டடத்திற்கான முதல் அத்திவாரக் கல்லினை சுமந்து கொண்டு வருகின்றது.

கலர் ஒவ் கறேஞ் நிறுவனமானது இலங்கையில் உள்ள புற்று நோயாளருக்கு தேவையான வளங்களை மேம்படுத்துவதற்கும் நவீனமயப்படுத்துவதற் கும் தன்னை அர்ப்பணித்துள்ளது. 2008 ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் பிரபல வியாபார நிறுவனங்களின் உயரதிகாரிகளை இயக்குநர்களாக நியமித்திருக்கிறது.

இதில் நாதன் சிவகணநாதன், டயன் தோமஸ், சேனாதிராசா, டாக்டர் கன்ஸ் விஜயசூரிய, தியாகராஜா, சிவரத்தினத்துடன் பிரபல கிரிக்கெட் வீரர் மகேல ஜயவர்த்தனவையும் இயக்குநர்களாக கொண்ட இந்நிறுவனம் முதலாவது முயற்சியாக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு தீவிர கண்காணிப்பு பிரிவிற்கான கட்டத்தை நிர்மாணித்து கொண்டிருக்கும் வேளை தீவிர சிகிச்சை பிரிவு ஒன்றை மேம்படுத்தும் முயற்சியிலும் ஈடுபடவுள்ளது.

டாக்டர் சுலோச்சனா யோகநாதன் (முன்னாள் பணிப்பாளர் NCI,டாக்டர் ஜெயகுமாரன் (புற்றுநோய் வைத்திய நிபுணர்) ஆகியோரும் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர்களின் அதிகரிப்பும் அவர்களது தேவை பற்றியும் கலர் ஒவ் கறஞ்ஜின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

அவர்களின் முயற்சியினால் 2 மில்லியன் டொலர் மதிப்புள்ள தொடர் திட்டங்களை வகுத்துள்ளது. இந்தத் திட்டத்தில் புற்றுநோய் பாதிப்புக்குள்ளான சிறுவர்களுக் கான அதி கவனிப்பு பிரிவும் கதிர் சிகிச்சைப் பிரிவும் உள்ளடங்கும்.

இத்தொடர் அணியில் சுமார் 15 பேர் தொடர்ந்தும் நடை பயணத்தை செய்கிறார்கள். நாளுக்கு நாள் தொடரணிக்கு தைரியம் ஊட்டும் வகையில் ஆதரவு தெரிவித்தும் சுமார் 300 பேர் வரையான பொது மக்கள் கலந்து கொண்டனர். இதுவரையில் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வழி நெடுகிலும் மக்கள் ஆத ரவையும் வரவேற்பையும் பெற்ற இந்நடை பயணத்தில் பிரபல குத்துச்சண்டை வீரர் மஞ்சு வன்னியராச்சி முற்றும் முழுதாக பங்கு கொள்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பிரபல கிரிக்கெட் வீரர்களாக மஹேல ஜயவர்த்தன, டில்சான், குமார சங்கக்கார, அஞ்சலோ மத்தியூஸ் இப்பயணத்தில் பங்கேற்றனர்.

ரூபா 200 மில்லியனை இலக்காக கொண்ட இந்நடை பாதை என்ற பயணம் இதுவரை யில் 127 மில்லியன் ரூபாய்களை இற்றை வரை சேர்த்துள்ளது. (ஸ்ரீ-6-2)

## இளையோர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு


இளையோர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை ஆராய்ந்து வருவதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் லலித் பியூம் குறிப்பிட்டார்.

இளையோர் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளும் நாட்களில் உறுப்பினர்களுக்கான உணவு, போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளை வழங்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளையோர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு கடந்த 16ஆம் திகதி மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது. வழமையான பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவாக மாதத்திற்கு ஒருமுறை இளையோர் பாராளுமன்றம் கூடவுள்ளது

இந்தப் பாராளுமன்றத்தில் 335 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதுடன் அவர்களுள் 332 உறுப்பினர்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் இடம்பெற்ற தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)



யாழ். மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 16ஆம் திகதி மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களைப் படத்தில் காணலாம்.

(படம்:தனங்கிளப்புச் செய்தியாளர்)

## வடபகுதி மக்கள் அரசாங்கத்தை நிராகரித்துள்ளனர்– ஜே.வி.பி

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் இடம்பெறாத நிலையிலும் வடபகுதி மக்கள் துணிச்சலுடன் அரசாங்கத்தை நிராகரித்துள்ளனர் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நாட்டில் சவாலுக்கு முகம் கொடுத்துள்ள ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பாக ஜே.வி.பி.யின் அரசியல் பீடம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரச வளங்களை, அதிகாரத்தை பயன்படுத்தியதோடு மக்களை அச்சுறுத்தி தாக்குதல்களை நடத்திய சூழ்நிலையிலேயே அரசாங்கம் தேர்தலை நடத்தியது.

விசேடமாக வடபகுதி மக்களின் வாக்குகளை பறிப்பதற்கு இராணுவத்தை பயன்படுத்தி பலாத்காரம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கும் பொலிஸ் ஆணையாளருக்கும் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இத்தேர்தலிலும் மக்களின் விருப்பத்தை சுதந்திரமாக வெளியிடமுடியாது தடுக்கப்பட்டது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலும் வடபகுதி மக்கள் அரசாங்கத்தை நிராகரித்துள்ளனர். வழமையாக இத்தேர்தலுக்கு பின்னரும் மக்கள் மீதான வரிகளை அரசாங்கம் அதிகரிக்கும். அச்சுறுத்தல்கள் இருந்த போதும் எமது கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதாகவும் ஜே.வி.பி. அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# காணிகளுக்கான உண்மையான உரித்தைப் பதிவு செய்யும் "பிம்சவிய" நிகழ்ச்சித் திட்டம்

## வடமாகாணத்தில் முதல்முறையாக நல்லூர் பிரதேச செயலகத்தில் ஆரம்பம்

**காணி உரித்து பதிவதற்கான அரச நிகழ்ச்சித் திட்டமான ''மண்ணின் மகிமை'' (பிம்சவிய) திட்டத்திற்கான ஆரம்பவிழா இன்று நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

மண்ணின் மகிமை (பிம்சவிய) என்பது காணிக்கான உரிமையை பதிவு செய்யும் திட்டம் ஆகும். அதாவது புழக்கத்திலுள்ள உறுதி, அளிப்பு மற்றும் உத்தரவுப்பத்திரம் போன்ற பத்திரங்களுக்கு பதிலாக புதிதாக ஒரு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

காணி நிர்ணயத்திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத்திணைக்களம், நில அளவைத்திணைக்களம் என்பவற்றுடன் ஆட்பதிவுத் திணைக்களமும் இணைந்து பிரதேச செயலகங்களூடாக இத்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றன.

இத்திட்டம் இலங்கையின் ஏனைய பாகங்களில். நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள போதிலும் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் தற்பொழுதே அறிமுகப்படுத்தப்பட்டு முதலில் நல்லூர் பிரதேச் செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிலம் என்பது ஒரு நாட்டின் அளப்பரிய சொத்து. ஒரு நாட்டின் அனைத்து சொத்துக்களையும் வளங்களையும் தாங்கி நிற்பதுடன் மனிதனின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நிலமே மூலாதாரமாகவும் விளங்குகின்றது. இந்த நிலத்திலிருந்து மனிதன் தன் தேவைக்காக ஒதுக்கிக் கொண்டு உரித்தாக்கிக் கொள்ளும் பகுதியே காணி எனப்படுகின்றது.

ஒரு நாட்டிற்கு நிலம் எவ்வளவு முக்கியமோ. அதுபோல் தனி மனிதனுக்கு காணி மிக முக்கியமான சொத்தாக காணப்படுகின்றது.

பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய இக்காணியின் உரிமை சிக்கலற்றதாகவும் தெளிவானதாகவும் இருக்கும் பட்சத்திலேதான் அதன் மூலம் பெறப்படும் நன்மைகள் எம்மை வந்தடையும். இன்று இக்காணியின் உரிமையை அதனை அனுபவிக்கும் உரிமையை பெற்றுக்கொள்ள பல வழிமுறைகள் காணப்படுகின்றன.

* விலை கொடுத்து வாங்குதல்
* நன்கொடையாக பெற்றுக் கொள்ளல்
* நீண்டகாலமாக அனுபவித்துவருவதன் மூலம் காணியின் உடைமைப் பலம் பெறுதல்
* பரம்பரையாக உடைமையாற்றுதல்
* அரசாங்கத்தால் வழங்கப்படுதல்

இவ்வாறு பெறப்படும் காணி உரிமையானது உண்மையான காணியுடைய 'உரிமையை' உறுதிப்படுத்துவதில்லை. அதாவது இப்போது அரசாங்கத்தில் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டு வரும் உறுதியானது ஓர் எழுத்து மூலமான ஆவணமே. அதாவது இருவருக்கிடையே அல்லது பலருக்கிடையே ஏற்பட்ட கொடுக்கல்-வாங்கல் அல்லது ஒப்பந்தம் தொடர்பான தகவல்களாகும். இதன்மூலம் காணியின் உண்மையான உரிமை சட்ட ரீதியாக பதிவாவதில்லை. இதனால் இம்முறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

அவை பற்றி நோக்கின்,

காணிக்காக வழங்கப்படும் உறுதிப்பத்திரத்தில் காணியின் உண்மையான உரிமை பதியப்படாமல் காணிக்கான ஆவணம் மட்டுமே இங்கு பதிவு செய்யப்படுகின்றன, உறுதிப்பதிவு செய்யும் தொழிற்பாடு தெளிவற்றதாக காணப்படுதல், உறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லைகளின் அடிப்படையில் காணியின் அமைவிடத்தை நிலத்தில்திட்டவட்டமாக கண்டுகொள்ள முடியாமை, காணியின் உரிமையை தேடுதல், அதனை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளல் என்பன செலவு கூடியதும் நீண்டகாலம் எடுக்கக்கூடியதுமான தொழிற்பாடாக காணப்படுவதுடன் காணியின் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் மீண்டும் தேடி அதன் அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டியும் காணப்படுகின்றமை, ஒரே காணிக்கு பல உறுதிகளை பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதுடன் முதற்பதிவு என்ற அடிப்படையில் போலியான ஆவணங்கள் செல்லுபடியாகும் தன்மை காணப்படுகின்றமை, காணி உறுதியில் காணப்படுகின்ற இவ்வகை பிரச்சினைகள் காரணமாக வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களில் கொடுக்கல்-வாங்கல்களை செய்து கொள்ள முடியாமை, காணி உரிமையை முதலீடாக மாற்றும் போது ஏற்படும் சிக்கல்கள் காரணமாக முன்னேற்றம் தடைப்படுதல், நாட்டிலுள்ள அனைத்து காணிகளுக்குமான சரியான ஒரு தரவுத்தளம் இல்லாமை.

இவ்வாறு பழைய முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி காணிகளை உண்மையான உரித்தை பதிவு செய்யும் திட்டமாக பிம்சவிய திட்டம் காணப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் காணி உரிமையாளர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கி காணி தொடர்பான தகவல் பெறப்படும்.

பின்னர் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து காணித் துண்டுகளும் நில அளவை செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்படுவதுடன் அக்காணியின் 30 வருட கால வரலாறும் உரிமையும் சரிபார்க்கப்பட்டு அக்காணிக்கான உரிமை வழங்கி அவ்வுரிமை பதிவு செய்யப்படுகின்றது.

இதன் மூலம் காணிக்கான உண்மையான உரித்து பெறப்படும். இதன்மூலம் வழங்கப்படும் பத்திரம் நம்பிக்கையானதாகவும் புரிந்து கொள்ள இலகுவானதாகவும் இருக்கும். இப்பத்திரத்தின் மூலம் உடனடியாகவும் மறைமுகமாகவும் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

உடனடி நன்மைகளாக,

* சட்ட ரீதியான முறையில் காணியின் உரித்து உறுதிப்படுத்தப்படல்.
* அரசின் அங்கீகாரம் கிடைத்தல்.
* துரிதமாகவும் இலகுவாகவும் நம்பகமான முறையிலும் காணிக் கொடுக்கல்-வாங்கல்களை மேற்கொள்ளக்கூடியதாகவும் இருத்தல்.
* காணியின் 30 வருடகால உரிமை சரிபார்க்கப்படுவதனால் பிணை வைப்பதற்கும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் காணியை பயன்படுத்த முடிகின்றமை.
* காணிப்பிணக்குகள், மோசடிகள் குறைவடைதல்.
* காணி தொடர்பான தகவல் முறைமை பேணப்படுதல், நாட்டின் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ள முடிதல் என்பன ஏற்படுகின்றன.

மறைமுக நன்மைகளாக,

* நீண்டகால அடிப்படையில் வறுமை ஒழிப்பு நடவடிக்கையாக அமைதல்.
* காணி முதலீட்டுச் சொத்தாக மாற்றமடைவதால் மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் மேம்படுதல்.
* காணிச்சந்தை பலப்படுதல்
* காணியில் காணப்படுகின்ற வளங்களை அறிந்து கொள்ள முடிவதுடன் அதனை பாதுகாக்கவும் முடிதல் என்பன ஏற்படுகின்றன.

எனவே மண்ணின் மகிமை (பிம்சவிய) என்னும் இத்திட்டத்தின் மூலம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து காணித்துண்டுகளும் பதிவு செய்யப்பட்டு உரிமைச் சான்றிழ் வழங்கப்படும்.

இதன்மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் தனது காணியின் உரித்தை பதிவு செய்வதுடன் உரிமைப் பிரச்சினை, எல்லை பிரச்சினை, நிதிநிறுவனங்களில் கடன் பெறமுடியாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொள்ளமுடியும்.

**நல்லூர் பிரதேச செயலகம்**
**(காணிப்பிரிவு)**

## வாகனப் பதிவுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு வருட காலத்தில் மோட்டார் வாகனங்களின் பதிவு 56 சதவீத அதிகரிப்பை கண்டுள்ளதாக மத்திய வங்கியின் பிந்திய தரவுகளிலிருந்து தெரியவருகின்றது. கடந்த ஜுன் 2010 இல் 30 ஆயிரத்து 905 ஆக இருந்த புதிய வாகனங்களின் பதிவு ஜுன் 2011 இல் 48 ஆயிரத்து 157 ஆக அதிகரித்துள்ளது. இது 56 சதவீத அதிகரிப்பாகும்.

புதிய முச்சக்கர வண்டிகளின் பதிவுகள் 8 ஆயிரத்து 07 இலிருந்து 13 ஆயிரத்து 753 ஆக அதிகரித்துள்ளன. இது 71 சதவீத அதிகரிப்பாகும். இதே காலப்பகுதியில் புதிய கார்களின் எண்ணிக்கை 606 இலிருந்து 5 ஆயிரத்து 29 ஆக அதிகரித்து 73.6 சதவீத அதிகரிப்பைக் கண்டுள்ளது.

கடந்த வருடம் மோட்டார் சைக்கிளின் புதிய பதிவு 18 ஆயிரத்து 735 ஆக இருந்தது. இவ்வருடம் இது 22 ஆயிரத்து 690 ஆக அதிகரித்துள்ளது. இது 21 சதவீத அதிகரிப்பாகும். பஸ், லொறி, வேறு போக்குவரத்து வாகனங்கள், ட்ரக்டர்கள் போன்ற வாகனங்களுக்காக புதிய பதிவுகளும் அதிகரித்துள்ளதை புதிய தரவுகள் காட்டுகின்றன. (ஸ்ரீ-2-4)

## மலையகத்தில் கடும் மழை

(கொழும்பு)

மலையகத்தில் நேற்று காலை பெய்த கடும் மழை காரணமாக பத்தனை, திம்புல்ல மற்றும் குயின்ஸ்பெரி ஆகிய தோட்டப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குயின்ஸ்பெரி ஆறு பெருக்கெடுத்ததன் காரணமாக குயின்ஸ்பெரி கீழ் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த தற்காலிக குடியிருப்புக்களில் வாழ்ந்து வந்த 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் லக்ஷபான நீர்த்தேகத்தின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி எரந்தன ஹேமவர்த்தன தெரிவித்துள்ளார்.

வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் நீர்த்தேகத்தின் தாழ்வான பகுதியான பொல்பிட்டிய மற்றும் லக்ஷபான ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2-4)

## தமிழ்மக்களின் தீர்ப்பை ஏற்கின்றோம்; ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை ரீதியாக புறக்கணிக்கின்றோம் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

கூட்டமைப்பினரின் வெற்றியின் ஊடாக தேர்தல் நியாயமானதாகவும் நீதியானதுமாக நடைபெற்றுள்ளது என்பது உறுதியாகின்றது. அரச வளங்கள் மற்றும் இராணுவம் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு போலியானது என்பதுவும் வெளிப்பட்டுள்ளதாகவும் அக்கட்சி குறிப்பிட்டது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் ஊடகச் செயலாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்ட ஜாதிக ஹெலஉறுமயவின் வேட்பாளர்கள் 7 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இதற்காக பொது மக்களுக்கு நன்றி கூறுகின்றோம். எவ்வாறாயினும் உள்நாட்டில் மாத்திரமல்லாது சர்வதேசத்திலும் மிகவும் ஆர்வத்தோடு எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் தான் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளூராட்சி சபை முடிவுகளாகும்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் பின் தள்ளப்பட்டுள்ளதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பை கௌரவிக்கின்றோம். அம்மக்களின் ஜனநாயக உரிமை முழுமையாக வெளிப்பட்டுள்ளதுடன் தமது பிரதிநிதிகளை சுதந்திரமாகவும் தெரிவு செய்துள்ளனர்.

எனவே வடக்கில் தேர்தல் மோசடிகள் நடைபெற்றதாக யாரும் கூற முடியாது. கூட்டமைப்பினரைப் பொறுத்தவரையில் பிரிவனைவாதத்துடன் செயற்படுபவர்களாவர்.

ஐக்கிய இலங்கையை துண்டாடும் சக்திகளை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே கொள்கை ரீதியாக கூட்டமைப்பை புறக்கணிக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைகளில் பொது மக்களுக்காகவும் அப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மாத்திரமே கூட்டமைப்பு செயற்பட வேண்டும். பிரிவினைவாதத்தீத தூண்டிவிட்டு மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லக்கூடாது என்றார். (ஸ்ரீ-2)

# பாக்குநீரிணையும் மன்னார் வளைகுடாவும் இரு நாடுகளுக்கும் பொதுவான மீன்பிடி வலயங்கள்

## இந்தியா தெரிவிப்பு; இலங்கை நிராகரிப்பு

இந்தியா தெரிவித்திருக்கும் பொதுவான மீன்பிடி வலயங்கள் என்று வரையறை செய்வதை இலங்கை நிராகரித்திருப்பதாகவும் இரு நாடுகளுக்கும் இடையில் கடல் எல்லைகளை வரையறுக்குமாறு இந்தியாவிடம் அழுத்தம் கொடுக்கும் எனவும் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற்சட்டங்களைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் விதமாக இலங்கையானது தொடர்ச்சியான அழுத்தங்களை இந்தியா மீது பிரயோகிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத்தில் கொழும்பில் இடம்பெறவுள்ள மீன்பிடி தொடர்பான இலங்கை-இந்தியா கூட்டு ஆணைக்குழுவின் சந்திப்பின் போது மீன்பிடி உரிமைகள் தொடர்பான விடயங்களை முதன்மைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக மீன்பிடித்துறை விவகாரங்களில் அதிகளவு கவனத்தைச் செலுத்த முடியாதிருந்ததாகவும் ஆனால் தற்போது யுத்தம் முடிவுற்றுள்ளதால் பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாப்பகுதியில் மீனவர்களின் உரிமைகள் பாதிக்கப்படாது செயற்பட வழிவகுக்க முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் பொதுவான மீன்பிடி வலயங்கள் தொடர்பான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட வேண்டும் என இவ்வாரம் இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ் வலியுறுத்தியதைத் தொடர்ந்து மீன்வளத்துறை அமைச்சர் இக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா இருநாட்டுக் கடற்கரை எல்லைகளுக்கு இடையில் அமைந்துள்ள குறுகிய நீர்ப்பரப்பாகும். வரலாற்று அடிப்படையில் இவை இரு நாடுகளுக்கும் பொதுவான மீன்பிடி வலயங்களாகும் என புதுடில்லியில் இடம்பெற்ற கருத்தரங்கில் நிருபமாராவ் இதனைத் தெரிவித்துக் கொண்டார்.

இது தொடர்பாக இரு நாடுகளும் சாத்தியப்பாட்டு விடயங்களை ஆராய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் உயர் ஆணையாளர் பிரசாத் காரியவசத்துடன் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

## வாகரையில் பாரியளவு வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் சுமார் 20 கிலோகிராம் எடையுடைய ரி.என்.ரி. வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் பிரதேசத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆயுதக் குழுக்களினால் வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

முக்கிய பிரபுக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் நோக்கில் ஆயுதக் குழுக்கள் வெடிபொருட்களை மறைத்து வைத்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் பல்வேறு ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-4)

## ரிசானாவை சவுதிக்கு அனுப்பிய முகவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அவரது தாயார் கோரிக்கை

(கொழும்பு)

தமது மகளின் வயது தொடர்பில் எச்சரிக்கை விடுத்த போதும் அவரை சவுதிக்கு அனுப்பிவைத்த வெளிநாட்டு முகவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரிசானா நபீக்கின் தாயார் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

நான்கு மாதக் குழந்தையின் இறப்பு தொடர்பில் சவுதியில் மரண தண்டனை கைதியாக உள்ள மூதூரை சேர்ந்த ரிசானா நபீக்கின் தாயாரே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக தமது மகள் வெளிநாடு செல்ல விரும்பினார். எனினும் வயது குறைவு காரணமாக தாம் அதற்கு விரும்பவில்லை. இதனை ஏற்றுக் கொள்ளாத வெளிநாட்டு முகவர், தமது மகளை சவுதிக்கு அனுப்பி வைத்ததாக ரிசானா நபீக்கின் தாயார் தெரிவித்துள்ளார்.

குறித்த முகவர் யார் என்பது தமக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ள அவர் ரிசானாவின் பாட்டிக்கே அவரைத் தெரியும் எனினும் ரிசானாவுக்கு சவுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டதாக கேள்விப்பட்ட உடனனேயே அவர் அதிர்ச்சியில் இறந்துவிட்டதாக அவரின் தாயார் குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

## மட்டு.வங்கிக் கொள்ளை தொடர்பில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற வங்கிக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாக கூறப்படும் நபர் ஒருவரும் அவரின் இரு மகன்களும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவத்தின் போது 160 மில்லியன் ரூபா பணமும் 15 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகளும் மக்கள் வங்கியில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் அதே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகள் ஆகியோரும் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் கடந்த 20 ஆம் திகதி வென்னப்புவவில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்போது மட்டக்களப்பு தொடரூந்து நிலையத்திற்கு அருகில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் ஒருவரிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்ட ரி 56 ரக துப்பாக்கியும் கொள்ளையடிக்கப்பட்ட ஒரு தொகுதி நகைகளும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 5 பேரைக் கொண்ட குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வங்கிக் கொள்ளையுடன் தொடர்புபட்ட ஏனையோரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தேடிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

## சவுதி அரேபியாவில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றும் 12 இலங்கையர்கள்

(கொழும்பு)

தாம் பணியாற்றும் இடத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக சவுதியில் பணியாற்றும் 12 இலங்கையர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த இலங்கை பணியாளர்கள் ரியாத்தில் அமைந்துள்ள சவுதி அரேபிய உயரதிகாரிகள் ஒருவருக்குச் சொந்தமான ஆடம்பர வீடொன்றில் பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமக்கு முறையான சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் நாளாந்தம் 17 மணித்தியாலங்கள் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த பணியாளர்கள் தொடர்பில் சவுதியில் அமைந்துள்ள இலங்கை தூதரக அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## கண்டியில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

கண்டி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் சேவையாற்றும் ஒருவர் இராணுவ அதிகாரியொருவரிடம் இலஞ்சம் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் முச்சக்கரவண்டி சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

குறித்த போக்குவரத்து பொலிஸ் உத்தியோக்த்தர் நேற்று முன்தினம் இரவு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது உந்துருளியொன்றில் பயணித்த ஒருவரை சோதனையிட்டுள்ளார். அதன் போது உந்துருளியில் பயணித்தவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இருந்திருக்கவில்லை.

இதன் காரண்மாக பெர்லிஸ் உத்தியோகத்தர் அவரிடமிருந்து தொழில் அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அதனை மீளப் பெறுவதற்கு மூவாயிரம் ரூபாவை கோரியுள்ளார்.

அந்தளவு தொகை தம்மிடம் இல்லை என தெரிவித்த உந்துருளியில் பயணித்த இராணுவ அதிகாரி நேற்றைய தினம் தருவதாக தெரிவித்துள்ளார்.

நேற்று குறித்த தொகையை கையளித்த இராணுவ அதிகாரி அதன் பின்னர் இந்த சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பணத்தொகையை பெற்றுக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் அதனை தம்வசம் வைத்துக் கொள்ளாது முச்சக்கர வண்டி சாரதியொருவரிடம் கையளித்துள்ளார்.

அதனையடுத்து நேற்று முன்தினம் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்ட கண்டி பொலிஸார் அவர்களை கைது செய்து நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். (ஶ்ரீ-2)



யா/ எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடமும் வகுப்பறைக் கட்டடமும் கடந்த 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட பிரதி அமைச்சர் ரோகன திசநாயக்கா, தீவக வலய கல்விப் பணிப்பாளர் வி. ராதாகிருஸ்ணன், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் பிரதி அமைச்சர் மற்றும் பாடசாலை அதிபர் ச.கமலதீபன், பாடசாலை ஆசிரியர் ஆகியோர் நாடாவை வெட்டி வகுப்பறை கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் விருந்தினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# உற்றறி கோட்பாடு

## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

07



பேராசிரியர் சபா ஜெயராசா

### உற்றறிகோட்பாடு, இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்

அகநோக்குப்...

இட் என்பது மிருக உணர்ச்சிகளின் தொகுதி. சமூக வாழ்க்கை அந்த மிருக உணர்வுகளைச் செப்பமிட்டு இசைவாக்கம் செய்கையிலே ஈகோ தோற்றம் பெறுகிறது. சுப்பர் ஈகோ என்பது உயர்ந்த இலட்சியங்களையும் விழுமியங்களையும் கொண்ட பகுதி.

மனம் மேற்கொள்ளும்கனவு வேலை நனவிலி உள்ளத்திலே அடக்கி வைக்கப்பட்டவற்றை வெளிப்படுத்தும் செயற்பாடாகின்றது. உளப்பகுப்பியற் கலை இலக்கியங்களை கனவு வேலையாகவே கருதுகின்றது. நனவிலி மனத்தின் விடுகற்பனைகள் கலை இலக்கிய ஆக்கங்களிலே குறித்த விளைவுகளை ஏற்படுத்துமாறு கையாளப்படுகின்றன. பால்மை வழியாக எழும் சிக்கல் ஈடிப்பஸ் சிக்கலால் விளக்கப்படுகின்றது.

இச்சைகளையும் ஆசைகளையும் ஒருவர் ஆழ்மனத்திலே அடக்கி அழுத்துதல் தனிமனிதருக்குரியது மட்டுமல்ல. சமூகத்தின் இயல்பே அத்தகைய ஒரு நிலையை உருவாக்கி விடுகின்றது என்று எரிக்புரோம் என்பார் உளப்பகுப்பியலை மார்க்சிய நோக்கிலே விளக்க முயன்றார்.


மேலும் உளப்பகுப்பியல் ஆண் ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்பதை பெண்ணிய ஆய்வாளர் வேறொரு கண்ணோட்டத்தில் விளக்க முற்படுகின்றார். உளப்பகுப்பியலிலும் நவீன கலை இலக்கிய ஆய்வுகளிலும் அதிகம் பேசப்படும் ஒருவராக லகான் விளங்குகின்றார். அவரும் பெண்ணியவாதிகளின் அதிக கண்டனங்களுக்கு உள்ளாக்கப்படும் ஒருவ்ராகவும் இருக்கின்றார்.

குழந்தை தனது செயற்பாடுகளின்போது தனது உடலின் மட்டுப்பாடுகளை விளங்கிக்கொள்ளாது கற்பனை நிலையிலே தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது. குழந்தையின் ஆரம்பகாலத்து அனுபவங்கள் உந்தல்களின் 'திரட்டலாகவே உள்ளன. அவ்வாறு வளரும் குழந்தை கண்ணாடிப்பருவத்திலிருந்து தன்னை இனங்காணத்தொடங்குகிறது. (Lacan, 1977:4) இப்பருவத்திலிருந்து கற்பனைச் செயற்பாடுகள் குறியீட்டு வடிவப் பிரநிதித்துவப்படுத்தலாய் மாற்றம் பெறுகின்றன.

லகானுடைய ஆய்வுளில் முக்கியமானது, மொழிபற்றிய அவரது கண்ணோட்டமாகும். அவர் உளப்பகுப்பியலையும் மொழியையும் தொடர்புபடுத்தி நனவிலி மனம், மொழி போன்று கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கட்டமைப்புவாதிகள் குறிப்பான் என்ற ஒன்றுக்கும் குறிப்பீடு என்ற ஒன்றுக்கும் என்ற வகையில் ஒன்றுக்கு ஒன்றான இணைப்பைக் குறிப்பிட்டுள்ளனர்.(One To One Relation)

மரபு வழியான மொழிக் கட்டமைப்புக் கோட்பாட்டை லகான் மறுத்துரைக்கின்றார். ஒருகுறிப்பான் பல்வேறு குறிப்பீடுகளை உருவாக்க வல்லது என்று அவர் விரித்துரைத்துள்ளார். சில சமயங்களில் குறிப்பான் என்பது குறிப்பீட்டின் மேலான ஆதிக்கத்தையும் செலுத்தி விடுகின்றது. கழிப்பறை எடுத்துக்காட்டின் வாயிலாக அதனை அவர் விளக்குகின்றார். கழிப்பறை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது. ஆனால், ஆண்பெண் என்ற குறிப்பான்கள் பண்பாட்டின் வழியாக மேலதிகாரத்தை எடுத்துக் கொள்கின்றன. மேலும் குறிப்பான் பல்வேறு குறிப்பீடுகளை உருவாக்கு வதற்குக் காரணம், ஒவ்வொருவரதும் நனவிலியின் இயல்பாகும். சிறுவயதிலிருந்தே நனவிலிமனத்திலே திரட்டி



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

வைக்கப்பட்டுள்ள அனுப வங்கள் குறித்த ஒரு குறிப்பானுக்கு பல்வேறு குறிப்பீடுகளை உருவாக் கிய வண்ணம் உள்ளன.

உணர்வுகள் நனவிலி மனத்தில் மொழி வடிவிலே கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளன. பால்மை உள்ளிட்ட சமூக அமைப்புக்கள் குறியீடுகளாக அங்கே உட்பொதியப் பட்டுள்ளன. ஒவ்வொருவரதும் நனவிலியின் இருப்புக்கும் இயல்புக்கும் ஏற்றவாறு குறிப்பிட்ட ஒரு குறிப்பானுக்கு பல்வேறு பொருள் கொள்ளும் நிலை ஏற்படுகின்றது. அத்துடன் குறிப்பீடு என்பது ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குப் பெயர்ந்து செல்லக்கூடியதாகவுமுள்ளது.

(தொடரும்)

# மரணம்-அப்புறம்?



ஆன்மீகம் 08

...எனவே இந்த அம்மையாரும் ஹாலிவுட் விடயங்களில் தீவிரமாகி, பெவர்லி ஹில்சில் சில வீடுகளும் அக்கம் பக்கத்தில் சில வீடுகளும் வாங்கி அந்தப்பக் கமே சுற்றிக்கொண்டிருந்திருக்கிறார்.

டாம் க்ரூய்ஸின் கண்களில் படுவதற்காக பார்டிகள் ஏற்பாடு செய்வதும், வீடுகள் வாங்குவதுமாக அந்த அம்மையார் இருந்ததைக்கண்டு அந்த அம்மையாரின் கணவர் பைத்தியம் பிடித்தது போலாகிவிட்டார். பிறகு இந்த விடயம் என் கவனத்துக்கு வந்தது. அந்தஅம்மையாரும் எப்படியோ என்னிடம் வந்து சேர்ந்தார். முந்தைய பிறவியில் டாம் க்ரூய்ஸ் தனது கணவராக இருந்திருக்கிறார் என்பதில் அந்த அம்மையார் 100 வீதம் உறுதியாக இருந்தார். அந்த அம்மையார் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதை நான் அறிந்து கொண்டேன். எனவே நான் கூறினேன், ஆமாம், அப்படித்தான், ஆனால் முந்தைய பிறவியில் டாம் குரூய்ஸைத் தெரியும். அவர் முந்தைய பிறவியில் சகிக்க முடியாத அளவிற்கு அருவருப்பான தோற்றத்துடன் இருந்தார்,உங்களுக்கு நினைவிருக்கிறதா? என்று அந்த அம்மையார் பித்துப்பிடித்தது போல் ஆகிவிட்டார். முன் பிறவி விடயங்கள் இப்படித்தான் மக்களைப் பைத்தியத்தில் தள்ளுகிறது.

**கேள்வியாளர்: ஐந்து வருடங்களுக்கு முன் இறந்த என் தந்தையுடன் தொடர்பு கொள்ள முடியுமா? அவர் தற்போது எங்கிருக்கிறார் என்பதை அறிய முடியுமா?**

சத்குரு: இக்கேள்வி உங்கள் உணர்ச்சி வயப்படுதலால் வெளிவருவதை என்னால் அறிய முடிகிறது. நான் உங்களைக் கேலி செய்வதற்காக இதைக்கூறவில்லை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, உங்கள் தந்தையுடன் உள்ள உங்கள் தொடர்பு அவர் உயிருடன் இருக்கும் வரை மட்டும்தான். உங்கள் தந்தையென்று நீங்கள் அறிந்திருப்பது ஒரு குறிப்பிட்ட உடலையும் மனதையும்தான். அவரைப்பற்றிய வேறெதுவும் உங்களுக்குத்தெரியாது.

"என் தந்தை ஒரு நல்ல மனிதர்" என்று நீங்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் உண்மையில் உங்கள் தந்தை நல்லவரா, கெட்டவரா என்பது உங்களுக்குத்தெரியாது. உங்கள் தந்தை நல்ல இதயம், நற்குணம், சாந்தம் , அன்பு கொண்ட மனிதனாக இருந்திருக்கலாம். ஆனால், அவர் யாரோ ஒருவரிடம் கொடூரமாகவும், உங்களிடம் அன்பாகவும், நேர்மையாகவும் இருந்திருக் கலாம். சமுதாயத்தில் தந்திரமுடன் நடந்து கொண்டிருக்கலாம். உங்களுடன் எப்படி இருந்தார் என்பதுதான் உங்களுக்குத் தெரியும். சமுதாயத்தில் நல்லமனிதராகவும் உங்களிடம் நேர்மைன்றியும்கூட இருந்திருக்க லாம். நீங்கள், அவருடைய உடம்பு, எண் ணங்கள் மற்றும் உணர்வுகள் ஆகிய சில பகுதிகளை மட்டுமே அறிவீர்கள்.

உங்கள் தந்தை இறக்கும்போது கட்டாயமாக அவருடைய உடலை இங்கே விட்டுவிட்டுத்தான் செல்வார். உடலை இங்கே விட்டுச்சென்று விடுவதால், இனி அவருடன் உங்களுக்கு எந்தத்தொடர்பும் இல்லை. நீங்கள் மிகவும் உணர்ச்சிமயமாக இருந்தா லும் பயன் இல்லை. ஏனெனில் அவருடன் இருந்த தொடர்பு முற்றிலும் முடிந்துவிட்டது. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர் உயிருடன் இருக்கும் வரைதான், உங் களால் அவருடன் தொடர்பு கொள்ள முடியும். ஆனால், அவர் உயிரோடு இருக்கும்பொழுது அவருடன் பேசுவதுகூட இல்லை. இறந்த பின்பு தொடர்பு கொள்ள விரும்புகிறீர்கள். இந்த முரண்பாடுகளை உங்களிடம் வைத்துக்கொள்ளாதீர்கள். அவர்கள் உயிரோடு இருக்கும்போது உங்களை முழுமையாக அவர்களுக்குக் கொடுங்கள். உங்களால் இயன்ற அனைத்தையும் அவர்களுக்குச் செய்யுங்கள். அவர்கள் உங்களைப் பிரிந்து சென்றபின்பு, உங்களால் அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது. எப்படியானாலும் ஒரு நாள் அவர்கள் உங்களைப் பிரிந்து சென்று விடுவார்கள். எனவே, அவர்கள் உங்களோடு இருக்கும்போது, உங்களால் முடிந்தவரை அவர்களுடன் ஈடுபாடு கொள்ளுங்கள். அவர்கள் இருக்கும்போது, உங்களால் அவர்களைப் பார்ப்பதற்கோ அவர்களுடன் பேசுவதற்கோ அல்லது நேரத்தைப் பகிர்வதற்கோ முடிவதில்லை. அவர்கள் மீது கோபம் அடைகிறீர்கள். ஆனால், அவர்கள் இறந்தபின்பு, அவர்களுடன் பேசுவதற்காக சொர்க்கத்துக்குச் செல்ல விரும்புகிறீர்கள். அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு, அங்கே e-mail வசதியில்லை.

எனவே இறந்தவர்களைப் பற்றி கவலைப் படத்தேவையில்லை. இறந்தவர்களை இறந்தவர்களிடம் விட்டு விடுங்கள். உங்கள் வேலை உயிரோடு இருப்பவர்களுடன்தான். உயிரோடு இருப்பவர் களுடன்தான் நமக்கு வேலை என்றால், அதை முழுமையாகச் செய்யவேண்டும் என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும். உங்களைச் சுற்றியுள்ள உயிர்களிடம் ஈடுபாடு கொள்ளுங்கள். இங்கிருக்கும்போது ஈடுபாடின்றி இருக்கிறீர்கள். உங்களுக்கு அருகில் இருப்பவரிடம் 'ஹலோ' என்று சொல்வதற்குக் கூட தயங்குகிறீர்கள். ஆனால், இறந்தவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறீர்கள் அப்படி ஏன்? உங்களைச்சுற்றிலுமுள்ள உயிர்களிடம் ஈடுபாடு கொள்ளுங்கள். அதுவே போதுமானது. பிறக்காதவர்களுடனும் இறந்தவர்களுடனும் எந்தத் தொடர்பும் வேண்டியதில்லை.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இந்தியாவுடனான சீபா உடன்படிக்கையால் இலங்கை அச்சம் கொள்ளத் தேவையில்லை

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் சீபா உடன்படிக்கை செய்து கொள்வது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அச்சமடையத் தேவையில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பட்டயக்கணக்காளர்களுக்காக நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி கோஷி மாத்தாய் கருத்துரைக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை உள்நாட்டு சந்தையில் இந்திய உற்பத்திகள் கட்டுப்பாடின்றி ஊடுருவக் கூடும் என்ற கருத்து பிழையானது. பல்வேறு காரணிகளை கருத்திற் கொண்டே இந்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சீபா உடன்படிக்கையின் மூலம் உள்நாட்டு வர்த்தகர்கள் பெரும் பின்னடைவை எதிர்நோக்க நேரிடும் என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதி பெறுமதி 5 வீதமாகவும் சீனாவிற்கான ஏற்றுமதி பெறுமதி ஒரு வீதமாகவும் அமைந்துள்ளது.

துரிதமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற ரீதியில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டும்.

பிராந்திய நாடுகளுக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை இலங்கை புரிந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆயினும் சீபா உடன்படிக்கையினால் நாட்டுக்கு பாரியளவில் பாதிப்புக்கள் ஏற்படும் என சில தரப்பினர் அச்சம் வெளியிட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை சைவப் புலவர் திருமதி சசிலேகாவும் மதிப்பீட்டுரையை திருமதி கௌரிசுரேசன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-35)

# மாநகர சபைகளுக்கான தேர்தல்களை செப்டெம்பரில் நடத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

மாநகர சபை உட்பட ஒத்திவைக்கப்பட்ட மாநகர சபைளுக்கான தேர்தல்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது.

தேர்தல் நடத்தப்பட்டாலும் கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக்கும் பிரேரணையையும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பு, கல்கிஸை, தெஹிவளை மற்றும் கோட்டை நகர சபைகளை ஒன்றினைத்து அதிகார சபையாக்கும் அரசாங்கத்தின் முயற்சியால் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. பாதுகாப்பு அமைச்சினால் உருவாக்கப்படும் இவ் அதிகார சபைக்கு ஆளுநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதோடு இப்பிரதேசங்களின் அதிகாரமும் அவருக்கு வழங்கப்படும். உத்தேசிக்கப்பட்ட இவ் அதிகார சபை சட்ட மூலம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்ற திட்டமிட்டிருந்த போதும் தனியார் ஓய்வூதியம் தொடர்பாக நாட்டில் பிரச்சினைகள் உருவெடுத்ததால் இத்திட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே மாநகர சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவும் அதன் பின்னர் அதிகார சபையாக்கும் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தெரிய வருகின்றது. (ஸ்ரீ-2)

# மாகாண சபைகளுக்கான அதிகார பரவலே மும்பைத் தாக்குதலின் எதிரொலி

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



மாகாண சபைகளுக்கான அதிகார பரவலே மும்பை தாக்குதலின் எதிரொலி என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும். இந்த நிலையில் 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆராயும் என குறிப்பிட்ட ஜனாதிபதி அந்த குழுவால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு நாடாளுமன்ற குழுவால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்ட யோசனையை தாம் ஏற்பதாகவும் இருந்த போதிலும் மாகாண சபைகளுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் ஒரு போதும் வழங்கப்படமாட்டாது.

இந்தியாவில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதன் எதிரொலியே அண்மையில் மும்பையில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல் ஆகும். இதனால் இலங்கையில் மாகாணங்களுக்கான அதிகாரம் அவசியமற்றது எனவும் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# வடக்கு மக்களின் தீர்ப்பை அரசாங்கம் சிரம்தாழ்த்தி ஏற்றுக் கொள்கிறது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தை மக்கள் அங்கீகரிப்பதாக அமைகிறது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் வடக்கு மக்கள் வழங்கிய தீர்ப்பை அரசாங்கம் சிரம் தாழ்த்தி அமைதியுடன் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் நாடளாவிய ரீதியில் பெரும்பான்மை பலத்துடன் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை அங்கீகரித்து அதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளனர். ஜனாதிபதியின் தலைமையில் செயற்படுத்தப்படும் திவிநெகும, கமநெகும, மகநெகும ஆகிய கிராமப்புற உட்கட்டமைப்பு கல்வி அபிவிருத்தி ஆகியவற்றை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக அரசாங்க ஊழியர்களின் பெரும்பாலானோர் அரசாங்கத்துடன் இருப்பது எமக்கு பெரும் தைரியத்தை கொடுத்துள்ளது.



வடக்கில் உள்ள மக்களின் தீர்ப்பை நாம் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்கிறோம். எனினும் இன, மத, குல, பேதம் இன்றி வடக்கை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி தலைமையில் நாம் தீர்மானம் எடுத்துள்ளோம். (ஸ்ரீ-2)

## இசை நிகழ்ச்சி

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சரமத்தில் வாரந்தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகத் தொடரில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இதில் புலோலி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (ஸ்ரீ-35)

# தமிழ் மக்கள் அரசியல் தீர்வுத் திட்டத்தை வலியுறுத்தியே வாக்களித்துள்ளனர்

## யோகராஜன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் அரசியல் தீர்வு திட்டத்தை விரும்புவதாக ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் .யோகராஜான் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்வு முடிவுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டமைப்பு வெற்றியீட்டியதுடன் வடக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் பாதகமானவை. வடக்கும் தெற்கும் தொடர்ந்து பிளவடைந்திருப்பதாகவே இந்த தேர்தல் முடிவு மீண்டும் வலியுறுத்தியுள்ளது எனவும் இது ஆரோக்கியமான நிலைமையல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மக்கள் அரசியல் தீர்வு திட்டம் ஒன்றை வலியுறுத்தி தேர்தலில் வாக்களித்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமது பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வு காணப்படவில்லை என்பதனையே வடக்கு மக்கள் தேர்தல் முடிவுகள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தமது பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பினை தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடம் வடக்கு மக்கள் ஒப்படைத்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

# தேர்தல் தினத்தன்று சட்டமீறல் தொடர்பில் 80 முறைப்பாடுகள்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்ற தினத்தில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 80 முறைப்பாடுகள் கிடைத்ததாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்களில் பெரும்பாலான சம்பவங்கள் பாரதூரமான சம்பவங்கள் அல்ல எனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப். பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சில தசாப்தங்களுக்கு பின்னர் வடக்கில் தேர்தல் நடைபெற்ற போதிலும் அங்குள்ள மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதில் பல்வேறு அழுத்தங்களை எதிர்நோக்கினர். தேர்தல் நடைபெற்ற தினத்திற்கு முன்னர் கரைச்சி பிரதேசத்தில் முகத்தை மூடிக் கொண்ட நபர்கள் வாக்காளர் அட்டைகளை பலவந்தமாக பெற்றுக் கொண்டமை தொடர்பாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

அத்துடன் இராமநாதபுரம் பிரதேசத்திலும் வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டதாகவும் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இன்சுலின் சிகிச்சை முறைகள்

04



இரத்த சீனியின் அளவு குறைய ஆரம்பித்தாலும், மேற்கண்ட அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தாலும் சர்க்கரை,பழம், சொக்லேட் போன்று இனிப்புப் பொருட்களை சிறிது சாப்பிட வேண்டும்.

தலை சுற்றல் அதிகமாக இருந்தால் இனிப்பை வாயில் போட்ட பின்னர் பேசாமல் அமர்ந்து விட வேண்டும். அறிகுறி தொடருமானால், அது மறையும் வரை இனிப்புப் பொருட்களை சிறிது சிறிதாக சாப்பிட்டு வரவேண்டும்.

ஒரே இடத்தில் அடிக்கடி ஊசி போடுவதால் உடலில் வீக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. இதையும் கவனித்தறிய வேண்டும்.

உடல் வீக்கம் அல்லது வேறு ஏதேனும் அலர்ஜி அல்லது பாதிப்புக்கள் காரணமாக ஏற்பட்டிருந்தால் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவேண்டும்.

நீங்கள் இன்சுலின் போடுவதைவிட மருத்துவரிடம் போட்டுக் கொள்வது நல்லது.

**இன்சுலின் பற்றிய தவறான கருத்துக்களும், விளக்கங்களும்**

இன்சுலின் ஊசி எடுத்துக் கொள்வதில் பல த்வறான கருத்துக்கள் மக்கள் மத்தியில் நிலவி வருவதால் பலர் இந்த விடயத்தில் குழம்பிப் போகிறார்கள். இவை பற்றிய தெளிவான உண்மைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

**தவறான கருத்து**

*இன்சுலின் சாராத(வயது வந்தோருக்கும் வரும் நீரிழிவின் போது) நோயாளி ஒருமுறை இன்சுலின் ஊசியைத் தொடங்கி விட்டால் அதை வாழ் நாள் முழுவதும் தொடர வேண்டும், நிறுத்தினால் பாதிப்பு அதிகமாகும்.*

**விளக்கம்**

கடுமையான மனஉளைச்சலையும்,நோயையும், கிருமித் தொற்றையும் ஊக்கப்படுத்தும் நேரங்கள், அறுவைச் சிகிச்சை போன்ற சமயங்களில் அல்லது இரத்த குளுக்கோசை உயர்த்தும் சில மருந்துகளை சாப்பிடும் போது இன்சுலின் சாராத நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் ஊசி தேவை.


உணவுக்கட்டுப்பாடு, வாய் வழி மருந்துகள், உடற்பயிற்சி ஆகியவற்றின் மூலம் நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் பழைய அணுகுமுறையே போதுமானது.

**தவறான கருத்து**

*இன்சுலின் ஊசி தொடர்ந்து போட்டுக் கொள்வதால் கண் பார்வை இழப்பு அல்லது வேறு விதமான நோய்கள் உண்டாகின்றன. இன்சுலின் எப்போதும் எதிர் விளைவை உண்டாக்கும்.*

**விளக்கம்**

கண்டிப்பாக இது உண்மையில்லை. நீண்ட காலமாக நீரிழிவு நோய் இருந்து அதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளாத போது உடலின் உள்ளுறுப்புக்கள்




பாதிக்கபபடுவது இயல்பு. இதற்கும் இன்சுலின் ஊசிக்கும் தொடர்பில்லை.

இன்சுலின் சிகிச்சை தொடங்கிய அதே நேரத்தில் பாதிப்பின் தீவிரம் தெரியவந்திருக்கலாம். இதை வைத்து இன்சுலின் காரணமாகத்தான் நோய் வந்தது, நோய் முற்றியது என்று கூறுவதெல்லாம் உண்மையல்ல.

இன்சுலின் ஊசி போட்டுக் கொள்பவர்கள் ஹைறபோ கிளைசீமியா எனப்படும் நீரிழிவுக் குறைவு நோய் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்சுலினை ஆரம்பிக்கும் முன்பே மருத்துவரை கலந்தாலோசித்து, உங்கள் வழக்கமான உணவு முறை,அதில் உள்ள கலோரிகள், சாப்பிட வேண்டிய கலோரி போன்றவற்றை தெரிந்து கொள்ளுங்கள்.

இதை முறையாகச் செய்து வந்தால் எந்த பாதிப்பும் உங்களுக்கு வராது.

**தவறான கருத்து**

*இன்சுலின் ஊசியை இரத்த நாளத்தில் தான் செலுத்த வேண்டும். ஊசி செலுத்தும் போது காற்றுக் குமிழிகள் சிரிஞ்சில் இருந்து அதை உடலில் செலுத்திக் கொண்டால் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.*

**விளக்கம்**

இன்சுலின் ஊசி கொழுப்புத் திசுக்களுள் தான் செலுத்தப்படுகிறது. இரத்த நாளத்துள் செலுத்தப்படுவதில்லை. இது கை, அடிவயிறு, தொடை அல்லது இடுப்பில் போடப்படுகிறது.ஆனால் நாளத்தைத் துளைக்கும் ஊசியை விட மிகச் சிறிய ஊசி இது.

இரத்த நாளத்தினுள் ஊசி போடும் போது காற்றுக்குமிழிகள் இருந்தால் மரணம் கூட ஏற்படும் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் இன்சுலின் ஊசி கொழுப்புத் திசுவில் செலுத்தப்படுவதால் அத்ததைய பயம் எதுவும் கிடையாது.

**தவறான கருத்து**

*இன்சுலின் எப்போதும் மோசமான எதிர் விளைவுகளை உண்டாக்கும்.*

**விளக்கம்**

இன்சுலின் உணவு மற்றும் செயல்பாடுகளுக்கு தொடர்பு கொண்டது தான் ஹைறபோ கிளைசீமியா எனப்படும் இரத்த நீரிழிவு குறைவு.

ஆகவே, இன்சுலின் எடுத்துக் கொள்ளும் முன்பும் ஹைறபோகிளைசீமியா பிரச்சினை தவிர்க்க மருத்துவரை கலந் தாலோசிப்பது நல்லது.

வழக்கமாக எடுத்துக்கொள்ளும்உணவு, மாற்றி சாப்பிட வேண்டியிருந்தால் அது பற்றிய விபரம்,உணவில் அடங்கிய கலோரிகள் ஆகியவற்றைப் பற்றி மருத்துவரிடம் நேரிலோ தொலைபேசி வாயிலாகவோ கலந்தாலோசிக்க வேண்டும்.

**தவறான கருத்து**

*இன்சுலினை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்க வேண்டும். பயணம் செய்யும் போது இன்சுலினை கூடவே எடுத்துச் செல்வது ஆபத்தை விளைவிக்கும். இன்சுலின் ஐஸ் கட்டியாகிவிட்டாலும் அதை எடுத்துப் பயன்படுத்தலாம். சூடாகிவிட்டால் தான் எதிர்பாராத ஆபத்தை உண்டாக்கும். மட்பாண்டங்களில் இன்சுலினை வைத்திருக்கக்கூடாது*

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

**விளக்கம்**

பயன்பாட்டிலுள்ள இன்சுலின் போத்தலை உரிய வெளிச்சத்திற்கும், மிகவும் சூடான அறை வெப்பத்திற்கும் அப்பால் மிதமான தட்பவெப்ப நிலையில் ஒரு மாதத்திற்கு வைக்க முடியும்.

ஆகவே, வர்த்தக ரீதியிலான பயணம் அல்லது விடுமுறை நாட்களுக்கு வெளியூர் செல்லும் போது கைப்பை அல்லது சூட்கேஸ் பெட்டியில் வைத்துக் கொள்வதே போதும்.


இன்சுலின் ஐஸ் கட்டியாகிவிட்டால் அதை தூர எறிந்து விடுவதுதான் நல்லது. அதே போல சூரியனின் நேரடி வெப்பம் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முப்பது டிகிரி சென்டி கிரேட் வெப்பத்திற்கும் அதிகமான இடத்தில் இருந்து இன்சுலின் சூடாகிவிட்டால் கெட்டுவிடும். குளிர்ச் சாதனப் பெட்டி கிடைக்காவிட்டால் சாதாரண மட்பாண்டங்களில் கூட இன்சுலினை வைத்து பாதுகாக்கலாம். (தொடரும்)




# நகத்தில் நோய் அறியலாம்


03



**நகத்தில் தோன்றும் நோய்க்ளைக் குணப்படுத்தி விடமுடியுமா?**

நகத்தில் தோன்றும் எல்லா வியாதிகளுக்கும் நவீன மருத்துவத்தில் மிகச் சிறந்த சிகிச்சை முறைகள் உள்ளன. பூஞ்சைக் காளான் தொற்று 6 முதல் 12 வாரங்க்ளில் முழுமையாகக் குணமாகக் கூடியது.

எல்லா நகப் பாதிப்புக்களுக்கும்



நவீன மருந்துகள் உள்ளன.

**நகத்தை எப்படி எல்லாம் பராமரிக்கலாம்?**

நகத்தைக் கடிக்காமல் இருப்பதே நகப் பராமரிப்பின் முதல் அம்சம்.

நகங்களைவிரலை விட்டு வெளியே வராமல் அடிக்கடி நறுக்க வேண்டும்.



நகங்களில் அழுக்குச் சேராமல் பார்த்துக் கொள்வதும் கழிப்பறை சென்று வந்த பின் சவர்க்காரம் போட்டுக் கைகளைக் கழுவுவதும் அவசியம்.

இப்பராமரிப்பு கை விரல்களுக்கு மட்டுமல்ல-கால் விரல்களுக்கும் பொருந்தும்.

பல பேர் கால் விரல் நகங்களை ஏதோ தனக்கு சம்பந்தம் இல்லாதது மாதிரி கண்டுகொள்வதில்லை.

நகத்தைப் பராமரிக்க வேண்டும் என்று சொல்வது கூட பலருக்கு அவ்வளவு முக்கியமான விடயமா? என்று கேட்கத்தர்ன் தோன்றும்.

உண்மையில் பராமரிப்பல்லாத நகத்தின் மூலமாக பல சுகாதாரக் கேடான நோய்கள் உண்டாகலாம்.

உதாரணமாக குடல் பாதிப்புக்கள், வயிற்றில் புழுக்கள் போன்றவை வருவதைக் குறிப்பிடலாம்.


நகத்தைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருப்பதுகூட ஒரு வகை மன நோயாகும்.

இதற்கு Onychophagia என்று பெயர்.

தோல் சிகிச்சை நிபுணர்
டாக்டர் எஸ்.முருகுசுந்தரம்
MBBS, DD, சென்னை-10

தாழ்வு மனப்பான்மை, மனச் சோர்வு உள்ளவர்களுக்கு இப்பாதிப்பு அதிகமாயிருக்கும். (முற்றும்)

# நவீன எண் சோதிடம்



## மனிதனின் வாழ்க்கை பெயரில்தான் அடங்கியுள்ளது

02

### எண்களும் கிரகமும்

உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் 9 எண்களுக்கு மேல் எண்கள் இல்லை. இந்துக் கோயில்களில் நவ (9) கிரகங்கள் வெவ்வேறு திசையைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் அதனுடைய தன்மைகளும் வெவ்வேறுதான். ஒவ்வொரு எண்ணுக்கும் என்ன கிரகங்கள் என்பது கீழே கொடுக்கப்பட் டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - 1 | சந்திரன் | -2 |
| குரு | - 3 | ராகு | -4 |
| புதன் | - 5 | சுக்கிரன் | -6 |
| கேது | - 7 | சனி | -8 |
| செவ்வாய் | - 9 | | |

### எழுத்துக்குரிய எண்கள்

ஒவ்வொரு எழுத்தும் எந்தக் கிரகத்தைச் சார்ந்துள்ளது என்பதை எண்கணித ஆராய்ச்சியாளர்கள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்து, கடுமையான அனுபவ ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்துள்ளதை நாமும் பிற்பற்றி வருகின்றோம். எனது அனுபவ ஆராய்ச்சியில் கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்குரிய எண்கள் பொருத்தமானதாக இருக்கின்றது. இதை மையமாக வைத்து நான் அமைத்துக்கொடுத்த வியாபார விலாசமும் பெயர்மாற்றமும் நன்மையளித்துக் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டு ஆயிரக்கணக்கான நண்பர்கள் பின்பற்றுகின்றனர். இதனால் எண்கணித ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்த எழுத்துக்களுக்குரிய எண்களை, நாமும் பின்பற்றிப் பயனடைவோம். நான் முன்னரே குறிப்பிட்டபடி 8 எண்ணுக்குள்தான் எல்லா எழுத்துக்களையும் அமைத்துள்ளனர்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | 1 | சூரியன் |
| B , K , R | 2 | சந்திரன் |
| C,G,L,S, | 3 | குரு |
| D , M , T | 4 | ராகு |
| E,H,N,X | 5 | புதன் |
| U , V. W | 6 | சுக்கிரன் |
| O,Z | 7 | கேது |
| F , P | 8 | சனி |

உ+ம்: M.ANUSHIYA
4+1+5+6+3+5+1+1+1=27

### ஆர்வலர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது

**உடல் எண், உயிர் எண்**

முதலில் உங்களுடைய பிறந்த தேதி, மாதம்,வருடம் ஆகிய இம் மூன்றும் உண்மையானவைகளாக இருக்க வேண்டும். பிறந்த தேதியை மட்டும் கூட்டி வருகின்ற எண் உடல் எண்ணாகவும் தேதி,மாதம்,வருடம் ஆகிய மூன்றையும கூட்டி வருகின்ற எண் உயிர் எண்ணாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் 12.5.1946 இல் பிறந்துள்ளார் என்றால் அவருடைய உடல் எண் (1+2=3) மூன்றாகும். உயிர் எண்(1+2+5+1+9+4+6=28, 2+8=10) ஒன்று ஆகும். தற்பொழுது உடல் எண்3; உயிர்எண் 1; இதனால் இவர்கள் 3ம்,1ம் என்ற குரு, சூரியன் ஆதிக் கத்தில் பின்னர் கொடுக்கப்பட்ட பலனைப்பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் வருடங்களில் கணக்கிடும் போது காலை, 6மணிவரை முதல் நாளாக கணக்கிடுவர். ஆனால் ஆங்கில முறைப்படி இரவு 12 மணிக்கு மேல், அடுத்த நாளாகி விடும். உதாரணமாக ஒருவர் 31ஆம் திகதி இரவு 12.5க்கு பிறந்தால், அவர் ஓராம் தேதி பிறந்தவராகக் கருத வேண்டும். இதைவிட்டு 31 ஆம் திகதி பிறந்தவராகக் கணக்கிடுவது, எண்கணித முறைப்படி பலனை அடைய முடியாது.

### சூரியன்-பொதுப்பலன்

உலகம் இயங்க சூரியன் ஒரு காரணமாக இருக்கின்றது. என்பதை நாம் அறிவோம். சூரியன் சந்திரனைப்போலத் தேய்ந்து வளராது. நிரந்தரமான தோற்றத்தையும் ஒளியையும் கொடுக்க வல்லது.

இதைப்போன்று சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் ஒரு நிலையாக நின்று நாட்டின் நல்லியக்கத்திற்கு முதற்காரணமாக விளங்குவார்கள். இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் அரசியல் வாதியாகவும் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் விளங்குவர்.


இன்னும்சிலர், பலருக்கு வேலை வாய்ப்பளிக்கும் பெரும் தொழில் நடத்திக்கொண்டு மதிப்பான பொது ஜன ஆதரவாளர்களாகவும் தலைவர், பொருளாளர், நிர்வாகி என்ற பதவிகளை வகிப்பவராகவும் விளங்குவர்.

சூரிய ஆதிக்கம் குறைந்தால் மேற் கூறிய பலன்கள் இவர்களுக்குச் சிறிதாவது கிடைக்கும். மாணவப் பருவத்திலே கூட சூரிய ஆதிக்கமாகிய 1,10,19,28 ஆம் தேதிகளில் பிறந்தவரை வகுப்புத் தலைவராகவும் பள்ளித்தலைவராகவும் தேர்ந்தெடுப்பார்கள். தான் விரும்பாதிருந்த போதிலும் மற்றவர்கள் இவர்களை விடாது தலைமை ஏற்கும்படி கூறுவர்.

இவர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாய் கடமையை நல்லமுறையில் நடத்தும் திறனுடையவராய் இளமையிலேயே பெற்றுவிடுகின்றனர். ஆனால், 28 ஆம் தேதியில் பிறந்தவர்கள் மட்டும் தனக்குத்தகுதி குறைவு என்ற தயக்கத்தோடு வாழ்வர்.

இவர்கள் தனது பிறந்த தேதிக்கும், தேதி,மாதம்,வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்ணுக்கும் பொருத்தமானதாகப் பெயரை அமைத்துக் கொண்டால் எல்லா வளமும்பெற்று வாழ்வர்.

சூரிய ஆதிக்கம் கொண்ட 1 என்ற எண்ணுக்கு 9 வகையான உயிர் எண்கள் உண்டு. இதை அறிந்து கொள்ள ஒவ்வொருவரும் தனது பிறந்த தேதி, மாதம்,வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்ணைக் கணக்கிட்டுப் பின்னே கொடுக்கப்பட்டுள்ள எண்களின் ஆதிக்கத்தின் பலன்களைத் தெரிந்து கொண்டு பின்பற்றலாம்.



### நூலாசிரியர் உரை

எல்லோரும் எல்லாமும் பெறலாம் என்பதே எனது கருத்து. ஆனால் எப்படிப் பெறுவது என்பதைப் பற்றித்தான் இந்த நூலில் எழுதியிருக்கின்றேன். எண்கணிதம் யோகத்தைப் பிடிக்கக்கூடிய ஒரு கணக்கு.

எண்கணிதமாகிய நியூமராலாஜியை பின்பற்றியபின் எனக்கு ஏற்பட்ட அனுபவமும் ஆராய்ச்சியும் நான் பெயர்மாற்றி அமைத்துக் கொடுத்து நன்மை பெற்றவர்களின் அனுபவமும் சேர்த்துத்தான் ஆண்டவன் அருளால் இந்த நூல்லை உருவாக்கி இருக்கின்றேன். இந்தக் கணக்கை பலர் கற்றறிந்தபோதும் முழுமையான ஆராய்ச்சி இன்றி தவறாக பெயரை மாற்றிக் கொண்டோ அணியவேண்டிய மோதிரக்கல்லை மாற்றி அணிந்து கொண்டோ கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

இதற்குக் காரணம் ஒரு ஆராய்ச்சியாளர் எழுதிய நூலை முழுமையாகப் படிப்பதில்லை. அரைகுறையாகப்படித்து கணக்கைப் பிணக்காக்குகின்றனர். இதைப்பார்த்த எனக்கு ஒரு மனிதன் ஆராய்ச்சி செய்யாது, தெளிவாகப்புரிந்து கொள்ளும்படி எழுத வேண்டும். என்று முடிவு செய்தேன். அதற்கேற்ப ஆண்டவன் அருளால் இந்நூலை உருவாக்கி இருக்கின்றேன். பலருக்கு நான் அமைத்துக் கொடுத்த வியாபார விலாசமும், பெயர்மாற்றமும் நன்மையளித்துக் கொண்டிருக்கிறது. என்று கூறும் பொழுது மட்டற்ற மகிழ்ச்சியோடு அண்டவனுக்கு நன்றியும் கூறிக் கொண்டிருக்கிறேன்.

அதிக உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடிய சூரியனையும் மேகம் மறைத்து விடுவது போல் எவ்வளவு துன்பம் வந்தாலும் தடுத்து நமக்கு நன்மையளிக்கும் திறன் கொண்டது நியூமராலஜி என்ற எண்கணிதம்.

ஒரு மாணவன் ஒருபாடத்தில் குறைந்த மதிப்பெண்ணைப் பெற்று மற்றைய பாடங்களில் அதிக மதிப்பெண்ணைப் பெற்றிருந்தாலும் அவன் தோல்வி காண்பது போல் ஒரு மனிதன், மனுசி முழுமையான வாழ்க்கையைப்பெற நல்ல ஆரோக்கியம், நல்ல மனைவி, கணவன் நல்ல் குழந்தைகள் நல்ல செல்வம் ஆகியவை தேவை. இதில் ஒன்று குறைந் தாலும் ஒரு மனிதன் முழுமை பெற முடியாது. தோல்வியைத்தான் சந்திப்பான். ஆனால், ஆரம்பத்திலிருந்து முறையாக எண்கணிதத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் எல்லாவற்றிலும் சராசரியாக நன்மையை அடைய முடியும். சிலருக்கு இயற்கையாகவே எண்கணித முறைப்படி சரியாகப் பெயர் அமைந்திருந்தால் எல்லா நன்மையும்பெறுவர். இப் புத்தகத்தின் வாயிலாக சுமார் 60சதவீதம் எண்கணித விளக்கங்களை எழுதியுள்ளேன்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

**இந்த எண்கணிதத்தை அடிப் படையாகக்கொண்டு சூதாடுவதோ, தவறான காரியங்களுக்குப் பயன் படுத்துவதோ சரியல்ல.**

(தொடரும்)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. பின்னடைவு; முக்கிய நிலைகளிலும் இம்முறை தோல்வி

## ரணிலே பொறுப்பேற்க வேண்டும் – ரோசி



ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்வதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுடன் ஒப்பீடு செய்யும் போது ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தேர்தலில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மினுவாங்கொடை மற்றும் திருகோணமலை போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய நிலைகளிலும் இந்தத் தடவை தோல்வி ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒட்டுமொத்தத் தேர்தலில் கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதம் கட்சியின் பின்னடைவை விதந்துரைக்கும் என அவர் தெரிவித்துள்ளார். இந்தத் தேர்தல் தோல்வியின் பொறுப்பினை கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகவும் மக்களின் மத்தியில் அதிருப்தி நிலவி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் காத்திரமான எதிர்க்கட்சி என்ற ரீதியில் இந்த ஏதுக்களை ஐக்கிய தேசியக் கட்சி சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டும் எனவும் இதனை உதாசீனம் செய்தால் எதிர்காலத்தில் பாதகமாகன விளைவுகள் ஏற்படுவதனை தடுக்க முடியாது என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்சிக்குள் இன்னமும் உரியமுறையில் ஜனநாயகம் நிலைநாட்டப்படவில்லை என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அமெரிக்கா நிதித்தடை விதிக்குமானால் இலங்கைக்கு 13 மில்.டொலர்கள் இழப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா நிதித் தடை விதிக்குமானால் 13 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை இழக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு பதிலளிக்கத் தவறுதல், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த தவறுதல் மற்றும் அவசர காலச் சட்டம் போன்றவற்றை நீக்கத் தவறினால் இலங்கைக்கான அமெரிக்காவின் நிதியுதவிகளை தடை செய்வதற்கான தீர்மானமொன்றை அமெரிக்காவின் வெளிவிவகாரக்குழு கடந்த வியாழக்கிழமை எடுத்துள்ளது.

பிரித்தானிய தொலைக்காட்சியான சனல் 4 இல் ஒளிபரப்பிய ஆவணப்படத்தை அமெரிக்க காங்கிரஸ் அரங்கத்தில் திரையிடப்பட்டதன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் அமெரிக்க உதவி நிறுவனம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரையிலுமான நிதி ஆண்டுக்காக இலங்கைக்காக 6 பில்லியன் ரூபாய்களை அமெரிக்க அரசாங்கத்திடம் கோரியுள்ளது.நிதித்தடை காரணமாக அந்த நிதியும் இலங்கைக்கு கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டையிலிருந்தும் இந்தியாவுக்கான கப்பல் சேவை

அம்பாந்தோட்டைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டையிலுள்ளறுகுணு மாகம்புர துறைமுகத்தைப் பயன்படுத்தி அதன் மூலம் இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக இந்தியத் தூதர் ஆராயவுள்ளார்.

இந்தியாவிற்குச் செல்வதற்காக அம்பாந்தோட்டையில் வசிக்கும் மக்கள் மாதம் தோறும் கிட்டத்தட்ட 100 வரையிலான நுழைவிசைகளுக்கு விண்ணப்பிக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே இவ்வாறானதொரு புதிய கப்பற் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் 90 வீதமான நுழைவிசைகள் புனித தலயாத்திரிகளுக்கு வழங்கப்படுவதாகவும் இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அவர்கள் காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்படும் முதுகலைமாணி தமிழ், முதுகலைமாணி சைவசித்தாந்தம் மற்றும் கல்வியியல் முதுமாணி ஆகிய கற்கை நெறிகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

இவ் விரிவுரைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடைபெறும். இக்கற்கை நெறிகளை தொடரும் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-2)




- ★ 811-பைசண்டைன் பேரரசன் முதலாம் நிக் கபோரஸ் பல்கேரியாவின் பிளிஸ்கா என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் கொல்லப்பட்டான்.
- ★ 1139-முதலாம் அபொன்சோ போர்த்துக்கல்லின் முதலாவது மன்னனாக முடிசூடி லெயோன் பேரரசில் இருந்து விடுதலையை அறிவித்தான்.
- ★ 1788-நியூயோர்க் ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது மாநிலமாக இணைந்தது.
- ★ 1803-உலகின் முதலாவது பயணிகள் தொடரூந்து சேவை தெற்கு லண்டனில் ஆரம்பமாகியது.
- ★ 1847-லைபீரியா ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ★ 1848-மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக வீரபுரன் அப்பு தலைமையில் கிளர்ச்சி வெடித்தது. வீரபுரன் அப்பு கைது செய்யப்பட்டு ஒகஸ்ட் 8 இல் தூக்கிலிடப்பட்டான்.
- ★ 1891-டெஹீட்டி பிரான்சுடன் இணைந்தது.
- ★ 1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் உக்ரைனின் லுவிவ் நகரை நாசிகளிடம் இருந்து கைப்பற்றினர். அந்நகரில் இருந்த ஒரு இலட்சத்து 60 ஆயிரம் யூதர்களில் 300 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.
- ★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் முதலாவது வி-2 ஏவுகணை பிரித்தானியாவைத் தாக்கியது.
- ★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் போட்ஸ் டாம் என்ற இடத்தில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிற்கிடையில் போட்ஸ் டாம் உடன்பாடு எட்டப்பட்டது.
- ★ 1945-ஹிரோசிமாவில் போடப்படவிருந்த அணுகுண்டைத் தாங்கிய வண்ணம் இண்டியானாபொலிஸ் என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பல் டினியான் தீவை அடைந்தது.
- ★ 1952-எகிப்தில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் மன்னர் பாரூக் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவரது ஆறு மாதங்கள் அகவையுடைய மகன் இரண்டாம் புவாட் மன்னன் ஆக்கப்பட்டான்.
- ★ 1953-கியூபா புரட்சி: கியூபாவில் மொன்காடா இராணுவத் தளம் மீது பிடெல் காஸ்ட்ரோ தலைமையில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது.
- ★ 1956-அஸ்வான் அணைக்கட்டுக்கு உலக வங்கி நிதி உதவி வழங்க மறுத்ததை அடுத்து சூயஸ் கால்வாயை எகிப்திய ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் அரசுடமை ஆக்கினார்.
- ★ 1957-குவாத்தமாலாவின் சர்வாதிகாரி கார்லொஸ் அர்மாஸ் கொல்லப்பட்டார்.
- ★ 1957-இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- ★ 1958-எக்ஸ்புளோரர் 4 ஏவப்பட்டது.
- ★ 1963-மசிடோனியாவில் இடம் பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 100 பேர் வரை கொல்லப்பட்டனர்.
- ★ 1965-மாலைதீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முழுமையாக விடுதலை பெற்றது.
- ★ 1971-அப்பல்லோ 15 விண்கலம் ஏவப்பட்டது.
- ★ 1974-ஏழாண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் கிரேக்கத்தில் மக்களாட்சி ஏற்பட்டது.
- ★ 1994-எஸ்தோனியாவில் இருந்து ரஷ்யப் படைகளை வெளியேற்ற ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் முடிவெடுத்தார்.
- ★ 2005-டிஸ்கவரி விண்ணோடம் ஏவப்பட்டது.

### பிறப்புக்கள்


- ★ 1791-பிரான்ஸ் மொசார்ட், இசையமைப்பாளர் (இ.1844)
- ★ 1856-ஜோர்ஜ் பெர்டாட் ஷா, எழுத்தாளர் (இ.1950)
- ★ 1933-எட்மண்ட் ஃவெல்ப்ஸ், பொருளியல் அறிஞர்
- ★ 1933-மு.கு.ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர் (இ.2008)
- ★ 1939-ஜோன் ஹவார்ட், அவுஸ்திரேலியாவின் 25 ஆவது பிரதமர்
- ★ 1971-மேரி ஆன் மோகன்ராஜ், எழுத்தாளர்

### இறப்புக்கள்

- ★ 1857-ஒராசியோ பெட்டாச்சினி , யாழ்ப்பாணம் ஆயர்

### சிறப்பு நாட்கள்

- ★ மாலைதீவு - சுதந்திரதினம் (1965)
- ★ லைபீரியா- சுதந்திர தினம் (847)





ஞானக்குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பையும் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்களுடன் நிற்பதையும் அருகில் உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை அதிபர் கு.திலீபன், ஆசிரியர் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வெற்றி பெற்ற உறுப்பினர்களின் விபரம் வர்த்தமானியில் வெளியீடு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர் பட்டியல்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வர்த்தமானியில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களின் விபரங்கள் இன்றைய தினம் பிரதேச செயலாளர் காரியாலயங்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாண நிகழ்வுகள் தொடர்பில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிக்கையில்,

குறித்த உள்ளூராட்சி சபைகளின் பிரதானிகளை பெயரிட்டு அனுப்புமாறு தேர்தல் செயலக காரியாலயம் அறிவித்த பின்னர் அவற்றை காரியாலயத்திற்கு அனுப்பப்படவுள்ளதாக தெரிவித்தார்.

அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் வெற்றிபெற்ற பிரதானிகள் மற்றும் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2-4)

# கிழக்கு ஆயுதக்குழுக்களிடமிருந்து 3 ஆயுதங்களே கைப்பற்றப்பட்டன

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் கிழக்கில் இயங்கும் குறிப்பிட்ட ஒரு ஆயுதக் கும்பலுக்குச் சொந்தமான மூன்று ஆயுதங்கள் மட்டுமே கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை முறியடிக்கும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கி ஒன்றில் இடம்பெற்ற ஆயுதமுனைக் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து கிழக்கில் செயற்படும் ஆயுதக்குழுக்களிடமுள்ள ஆயுதங்கள் களையப்படும் என கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா உறுதியளித்திருந்தார்.

ஆனால், கடந்த மூன்று வாரங்களாக இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கைகளில் மூன்று ஆயுதங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுதங்களைத் தேடி கைப்பற்றும் இராணுவத்தினரின் முயற்சியில் தாம் வெற்றி பெற்றுள்ளதாக கிழக்கு மாகாண கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளபோதிலும், கைப்பற்றப்பட்ட ஆயுத உபகரணங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் இவர் இதன்போது வழங்கவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இத்தேடுதல் சம்பவமானது மிகவும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இதன்போது நாங்கள் சில ஆயுதங்களையும் இதனுடன் சம்பந்தப்பட்ட ஆயுதக்குழுவின் முக்கிய உறுப்பினர்களையும் கைதுசெய்துள்ளோம் என கிழக்கு மாகாணக் கட்டளை அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ - 2)

# அனல்மின் நிலைய நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையிடம்

(கொழும்பு)

நுரைச்சோலை லக்விஜய அனல்மின் உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தை இயக்கச் செய்யும் நடவடிக்கைகளை கடந்த சனிக்கிழமை முதல் இலங்கை பொறியியலாளர்கள் மேற்கொள்வதாக மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்தார்.

எனினும் நான்கு வாரங்களுக்கு சீனப் பொறியியலாளர்கள் இலங்கையின் பொறியலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2-4)

# இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானம் 2011 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 370 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளதாகத் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 245 மில்லியன் அமெரிக்க டொலர்களே வருமானமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் துரிதமாக வருமானத்தை அதிகரித்து வருவதில் சுற்றுலாத்துறை பெரும் பங்கு வகிக்கிறது எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 36.9 வீதமாக அதிகரித்துள்ளது. இவ்வருடம் முதல் ஆறு மாத காலப்பகுதியில் 3 இலட்சத்து 81 ஆயிரத்து 538 பேர் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்துள்ளனர்.

கடந்த வருடத்தில் முதல் ஆறு மாத காலப் பகுதியில் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 652 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்தனர் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2-4)

# வியாபாரிகளிடம் பணம் பறித்த பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

கொழும்பின் முன்னணி மொத்த வியாபாரிகளிடம் பணம் பறித்து வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தகர்களை அச்சுறுத்தியதில் அவர்களிடம் பணம் பறித்த கும்பலின் பிரதான சந்தேக நபராக இந்த பொலிஸ் பரிசோதகர் திகழ்கின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் தலைமையகத்திலும் குறித்த சந்தேக நபர் கடமையாற்றியுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த அதிகாரி மோட்டார் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி வந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

புறக்கோட்டையச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் 70 இலட்ச ரூபா கப்பம் பெற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றுமொரு வர்த்தகரிடம் 35 இலட்ச ரூபா கப்பமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் மேலும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் இரண்டு இராணுவ உத்தியோகத்தர்களும் அங்கம் வகித்ததாகவும் இவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2-4)

# தனியார் மற்றும் இ.போ.ச. பயணிகள் பேருந்துசேவை ஒன்றிணைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

தனியார்துறை மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றின் பயணிகள் பஸ் சேவை ஒன்றிணைக்கப்படவுள்ளது.

அமைச்சர் சி.பி.ரத்னாயக்க,குமார வெல்கம ஆகியோரின் பங்குபற்றலுடன் இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை கொழும்பு மாநகர சபையின் மண்டபத்தில் நடைபெறும்.

இச்சந்திப்பில் போக்குவரத்துத்துறை சார்ந்த பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசு, தனியார் போக்குவரத்துத்துறைகளுக்கான திருத்தப்பட்ட கூட்டு நேர அட்டவணை விரைவில் வெளியிடப்படுமென்று அரசாங்கம் தெரிவிக்கின்றது.ஆகக் குறைந்த கால அளவில் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வது இந்த புதிய திட்டத்தின் நோக்கமாகும். (ஸ்ரீ-2)

# இளைஞனொருவனை 17 முறை வெட்டி படுகொலை செய்த பாதகர்கள்

## மாத்தறையில் கொடூரம்

(கொழும்பு)

மதுபோதையில் வீதியில் நின்று உரையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது தவறுதலாக சைக்கிள் மோதுண்டதால் குறித்த இளைஞனை 17 முறை வெட்டிப்படுகொலை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. மாத்தறை மாவட்டம் திக்குவல்லைகோட்டேகொடயில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹோட்டல் ஒன்றில் பணிபுரியும் 24 வயதான இவ் இளைஞன் சைக்கிளில் சென்றபோது மதுபோதையில் இருந்தவர்களை மோதுண்டதால் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அந்த இளைஞனின் ஒரு கை துண்டிக்கப்பட்டதுடன் 17 முறை அவர் வெட்டப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக திக்குவல்லை பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். மேலும் சிலரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

இவ்விளைஞனை ஒருவர் பிடிக்க வேறொருவர் கத்தியால் வெட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்டு நிலத்தில் கிடந்த கையையும் பொலிஸார் எடுத்துச் சென்றனர். (ஸ்ரீ-4)

# மாயாவதியின் ஆட்சிக்கு எதிராக காங்கிரஸார் போராட வேண்டும்

## ராகுல் அழைப்பு

உத்தரப் பிரதேசத்தில் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி ஆட்சிக்கு எதிராக காங்கிரஸார் போராடவேண்டும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் வேண்டுகோள் விடுத்துள்ளார். உத்தரப்பிரதேசத்தில் அடுத்த ஆண்டு தேர்தல் நடக்க உள்ளது.

இதையொட்டி காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் அம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.


இளைஞர் காங்கிரஸாருடன் நடத்திய கலந்துரையாடலின்போது ராகுல் கூறியதாவது, மக்கள் பிரச்சினைகளின் பக்கம் அரசின் கவனத்தைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகளிடம் உள்ள ஒரே ஆயுதம் போராட்டம் தான். அதை வீணாக்காமல் சரியாக பயன்படுத்தவேண்டும்.

காங்கிரஸ் தொண்டர்கள் தங்கள் பகுதியில் உள்ள பிரச்சினைகள் குறித்து கடிதமாகவோ அல்லது மனுவாகவோ எழுதி அனுப்ப வேண்டும்.

காங்கிரஸ் கட்சி தொண்டர்களும் தலைவர்களும் பகுஜன் சமாஜ் கட்சியின் மோசமான ஆட்சிக்கு எதிரான போராட்டங்களை உடனடியாக நடத்த வேண்டும். (ஸ்ரீ-4)

# மத்தியில் காங்கிரஸுடனான கூட்டணி தொடரும்

## கருணாநிதி தெரிவிப்பு



மத்தியில் காங்கிரஸ் உடனான கூட்டணி தொடரும். எனினும் மத்திய அமைச்சரவையில் வெற்றிடமாக இருக்கும் தி.மு.க.வுக்கு ஒதுக்கப்பட்ட 2இடங்களைக்கேட்கப்போவதில்லை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறினார்.

கோவையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக்குழுக்கூட்டத்தின் நிறைவில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

காங்கிரஸ்- தி.மு.கவுக்கு ஒதுக்கப்பட்டு மத்திய அமைச்சரவையில் வெற்றிடமாக இருக்கும் 2 இடங்கள் குறித்து தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள், கட்சியின் மூத்த நிர்வாகிகள், எம்.பிக்கள் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

வெற்றிடமாக இருக்கும் அந்த இடங்கள் தி.மு.க.வைப் பொறுத்தவரை வெற்றிடமாவே இருக்கும். அதை நிரப்ப தி.மு.க.முயற்சி செய்யாது. இருப்பினும் தி.மு.க.தொடர்ந்து காங்கிரஸ் அணியில் இருக்கும்.

இந்த முடிவு காங்கிரஸ் மீதான அதிருப்தியில் எடுக்கப்படவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் சிலர் தி.மு.க. மீது வெளிப்படுத்தும் அதிருப்தி குறித்துத் தான் பொதுக்குழுவில் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்காகவே இந்த முடிவை எடுத்துள்ளோம். (ஸ்ரீ-4)

# ஏழ்மையில் மகன்களை ஏரில் பூட்டி நிலத்தை உழுத தந்தை

## மகாராஷ்டிராவில் சம்பவம்

(அமராவதி)



இந்திய நாடு வறுமையில் இருந்து மீளவில்லை என்பதை காட்டும் வகையில் மகன்களை மாடாக மாற்றிய கொடிய சம்பவம் மகாராஷ்டிராவில் நடந்திருக்கிறது.

அமராவதி மாவட்டத்தில் சீர்கேட் என்ற கிராமத்தில் வசிப்பவர் கிஷன்ராவ் தபூர்கர். இவர் ஏக்கர் கணக்கில் விவசாய நிலம் வைத்திருக்கிறார். ஆனால் சமீப கால இயற்கை பொய்த்த காரணமாக கடும் வறுமையில் வாடியிருக்கிறார். சமீபத்தில் மழை பெய்ததை அடுத்து அவரது நிலத்தை பதம் செய்ய ஆரம்பித்தார். முதல் கட்டமாக நிலத்தை உழுவதற்கு காளை மாடுகள் இல்லை. என்ன செய்வது தனது 2 மகன்களையும் ஏரில் பூட்டி நிலத்தில் களம் இறக்கி உழவுப்பணியை தொடக்கியுள்ளார்.

இந்த விடயம் உள்ளூர் பத்திரிகைகளில் வெளியாகி அனைவரையும் அதிர்ச்சியுற செய்துள்ளது. காளை மாடுகள் வாங்கும் அளவிற்கு எங்களுக்கு போதிய பணம் இல்லை. இதனால் எங்களுக்கு வேறு வழிதெரியவில்லை என்கின்றனர். மகன்கள் சோகத்துடன் நாள் ஒன்றுக்கு 2 காளைகளுக்கு ஆயிரம் ரூபாய் வாடகை கேட்கின்றனர். விலைக்கு வாங்க வேண்டுமென்றால் ரூ.;20 ஆயிரம் தேவைப்படும் என்ன செய்வது நாங்கள் மாடாக உழைக்கின்றோம் என்று முடித்துக் கொண்டனர்.

8 ஏக்கர் நிலம் இருந்தாலும் இந்த குடும்பம் இன்னும் வறுமைக்கோட்டுக்கு கீழ்தான் வாழுகின்றது. இந்த செய்தி வெளியானதை அடுத்து இவருக்கு தேவையான வசதி செய்து கொடுக்க உள்ளூர் நிர்வாகம் முன் வந்திருக்கிறது. ஆனால் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்தாலும் சாதி அடிப்படையில் இவர்களுக்கு காளை மாடுகள் அரசு சார்பில் வழங்க முடியாது என்று கைவிரித்து விட்டனர். (ஸ்ரீ-2)

# 2 ஜி அலைக்கற்றை ஊழலில் முன்னாள் அமைச்சர்களுக்கும் தொடர்பு

## நீதிமன்றில் ராசா வாதம்

(புதுடில்லி)



2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் கொள்கையையே பின்பற்றியதாகவும் தாம் எவ்வித தவறையும் செய்யவில்லை எனவும் நீதிமன்றத்தில் முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா வாதிட்டார்.

ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கில் குற்றச்சாட்டுப் பதிவு செய்வது தொடர்பாக சிபிஐ நீதிமன்றத்தில் வாதம் நடைபெற்று வருகிறது. இதில் குற்றம் சாட்டப்பட்டவரான ஆ.ராசா தனக்காகத் தானே வாதிடுவதாக தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி ஓ.பி.சைனி முன்பு ஆ.ராசா நேற்றையதினம் வாதிடுகையில், நான் தவறு எதுவும் செய்யவில்லை. ஸ்பெக்ட்ரத்தை ஏலம் விட வேண்டாம் என்ற முடிவு தேசிய பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான ஜனநாயகக் கூட்டணி அரசில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவு. அதையே நானும் தொடர்ந்து பின்பற்றினேன்.

நான் பின்பற்றிய தொலைத் தொடர்புக் கொள்கை தவறு என்றால் 1993 இல் இருந்து எனக்கு முன்பு பணியாற்றிய அனைத்து தொலைத்தொடர்பு அமைச்சர்களும் தவறு இழைத்தவர்களே. அப்படியென்றால் அவர்களும் என்னுடன் சிறையில் இருக்க வேண்டும்.

தொலைத் தொடர்பு அமைச்சர்களாக இருந்த அருண்ஷோரி 26 உரிமங்களையும் தயாநிதிமாறன் 22 உரிமங்களையும் விநியோகித்துள்ளார்கள். நான் 122 உரிமங்களையும் விநியோகித்துள்ளேன். எண்ணிக்கை ஒரு பொருட்டு அல்ல. அதேநேரத்தில் எவருமே ஏலத்தில் உரிமங்களை வழங்கவில்லை என்பதே குறிப்பிடத்தக்கது.

அவர்கள் (அருண்ஷோரி, தயாநிதிமாறன்) தவறு செய்யாத பட்சத்தில் என்னை ஏன் விசாரிக்க வேண்டும். நான் செய்ததை செய்யவில்லை என்று அவர்கள் மறுக்கட்டும் என்று ஆ.ராசா தனது வாதத்தை தொடர்ந்தார். மேலும் ஆ.ராசா தனது வாதத்தின் போது பிரதமர் மன்மோகன் சிங், அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரின் பெயர்களையும் குறிப்பிட்டார்.

பிரதமர் முன்னிலையில் ஸ்பெக்ட்ரம் விற்பனைக்கு அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஒப்புதல் அளித்தார். இதை பிரதமரை மறுக்கச் சொல்லுங்கள் பார்ப்போம் என்று வாதிட்டார் ராசா. (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# கனிமொழி விடயத்தில் சி.பி.ஐ பாரபட்சம்

## தி.மு.க.குற்றச்சாட்டு



2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழி பிணையில் வெளிவருவதை தடை செய்யும் உள்நோக்கத்துடன் சி.பி.ஐ பாரபட்சமான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது இயற்கை நியதிக்கும் நியாயங்களுக்கும் இந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கும் புறம்பானது என்று கோவையில் நேற்று முன்தினம் நடந்த தி.மு.க.பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அலைக்கற்றை ஒதுக்கீடு அரசாங்க கொள்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாஅல்லது தன்னிச்சையாக நிறைவேற்றப்பட்டதா என்பதற்கான விடை இன்னும் தெளிவாகாத சூழ்நிலையில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கு உள்ளது.

இதுவேறு. இந்த பிரச்சினைக்கு சற்று தொடர்பில்லாத கலைஞர் தொலைக்காட்சி நடத்திய கொடுக்கல், வாங்கல் போன்ற கடன்பிரச்சினைகள் வேறு- அவை அனைத்தும் காசோலை வாயிலாகவே நடைபெற்று வருமான வரித்துறைக்கும் தெரிவிக்கப்பட்டவையாகும்.

அந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தில் கனிமொழி 20 சதவீதம் பங்குக்கு உரியவர் என்ற முறையில் அதை ஒரு குற்றமாக கற்பித்து கனிமொழியும் நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் பிணையில் வருதைக்கூட இந்திய புலனாய்வுத்துறை கடுமையாக ஆட்சேபித்து இத்தனை நாட்கள் சிறையில் வைத்திருப்பது இயற்கை நியதிக்கும் நியாயங்களுக்கும் இந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கும் புறம்பானது.

ஒருவரை குற்றவாளி என்று தீர்ப்பு வழங்காத வரை அவரை தொடர்ந்து சிறையில் வைத்திருக்கக்கூடாது என்ற கருத்தை மத்திய சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர். வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிறையிலேயே இருக்க வேண்டும் என்பது சி.பி.ஐ எண்ணமா என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

மத்திய புலனாய்வுக்குழு கனிமொழி பிணையில் வெளிவருவதை தடைசெய்யும் நடவடிக்கை ஏதோ உள்நோக்கத்தோடு கூடிய பாரபட்சமான நடவடிக்கை என்றே பொதுக்குழு கருதுகிறது. (ஸ்ரீ-4)

## உள்ளூராட்சித் தேர்தல்-2011

# அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற வேட்பாளர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 3 சபைகளுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரு சபைக்கும் போட்டியிட்டு விருப்பு வாக்குகளின் அடிப்பாடையில் தெரிவான உறுப்பினர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வரமாறு,

### துணுக்காய் பிரதேச சபை

| வேட்பாளர்களின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| வி.இராசரத்தினம் | த.தே.கூ | 1151 |
| எஸ்.செல்வரட்ணம் | த.தே.கூ | 898 |
| ரி.ஜெயராசா | த.தே.கூ | 861 |
| வி.யோகலிங்கம் | த.தே.கூ | 527 |
| என்.சுஜந்தன் | த.தே.கூ | 389 |
| எஸ்.அமிர்தலிங்கம் | த.தே.கூ | 257 |
| பி.தவமோகன் | த.தே.கூ | 237 |
| ரி.சிவக்கொழுந்து | பி.மு | 267 |
| ரி.சிவகுமாரன் | பி.மு | 264 |

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| வேட்பாளர்களின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| அ.வின்சன்போல்ட் | த.தே.கூ | 328 |
| கா.சிவராஜா | த.தே.கூ | 248 |
| ஜோ.பேரின்பகரன் | த.தே.கூ | 245 |
| ப.றெஜிதாசன் | த.தே.கூ | 169 |
| ப்.டொமினிக் அன்ரன் | த.தே.கூ | 167 |
| தி.பிரதீபன் | த.தே.கூ | 100 |
| அ.அன்ரன் அன்பழகன் | ஐமசுமு | 472 |
| வை.தியாகராசா | ஐமசுமு | 468 |
| சி.சுந்தரலிங்கம் | ஐமசுமு | 385 |

### பூநகரிப் பிரதேச சபை

| வேட்பாளர்களின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| த.தங்கேஸ்வரன் | த.தே.கூ | 1196 |
| அ.ஸ்ரெல்லா | த.தே.கூ | 1031 |
| பொ.சிறீஸ்கந்தராசா | த.தே.கூ | 1000 |
| சி.யசோதரன் | த.தே.கூ | 959 |
| தி.அனந்தவரன் | த.தே.கூ | 937 |
| சி.பேரின்பநாதன் | த.தே.கூ | 747 |
| கு.குகேந்திரன் | ஐமசுமு | 1368 |
| அ.பியந்வேணு றோயல் | ஐமசுமு | 1324 |
| வ.சந்திரலோகராசலிங்கம் | ஐமசுமு | 1285 |
| இப்றாஃகிம் முகமது காசீன் | ஐமசுமு | 1189 |

### கரைச்சி பிரதேச சபை

| வேட்பாளர்களின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| வை.குகராசா | த.தே.கூ | 4391 |
| வ.நகுலேஸ்வரன் | த.தே.கூ | 3074 |
| வி.சுபீஸ்கரன் | த.தே.கூ | 3059 |
| செ.புஸ்பராசா | த.தே.கூ | 2421 |
| சி.சிவச்செல்வம் | த.தே.கூ | 2347 |
| சி.தவபாலன் | த.தே.கூ | 1848 |
| ப.குமாரசிங்கம் | த.தே.கூ | 1843 |
| சு.தயாபரன் | த.தே.கூ | 1746 |
| இ.பொன்னம்பலநாதன் | த.தே.கூ | 1744 |
| சி.சுப்பையா | த.தே.கூ | 1494 |
| வே.செல்லத்துரை | த.தே.கூ | 1401 |
| ந.டெமிஸ்ராஜன் | த.தே.கூ | 1393 |
| மா.சுகந்தன் | த.தே.கூ | 1354 |
| ம.அன்ரன் டானியன் | த.தே.கூ | 1247 |
| த.ரெட்ணசிங்கசேதுபதி | த.தே.கூ | 1191 |
| மு.மனோகரன் | ஐமசுமு | 1296 |
| நா.சபாநாயகம் | ஐமசுமு | 948 |
| ப.இராமச்சந்திரன் | ஐமசுமு | 873 |
| து.கிருஷ்ணசாமி | ஐமசுமு | 849 |



மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் யா/ கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை மாணவர்களான அ.அனுரா 11 வயதுப்பிரிவினருக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாமிடத்தையும் பி.பிரதிக்ஷனா உயரம் பாய்தல் போட்டியில் இம்மாணவர்கள், பாடசாலை அதிபர், பிரதிஅதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் சகிதம் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:பருத்தித்துறை நிருபர்)

## தேர்தலையொட்டிய பொலிஸ் பாதுகாப்பு தொடரும்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

தேர்தலை ஒட்டி பலப்படுத்தப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு இன்னும் ஏழு நாட்களுக்குத் தொடரும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார். தேர்தல் முடிந்த பின்னரும் வன்முறைகள் தொடர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதனாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

அதேவேளை இத்தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் மற்றவர்களுக்கு எதுவித தொந்தரவுமின்றி தேர்தல் வெற்றிகளைக் கொண்டாட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இதேவேளை தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 107 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இதுவரை 136 சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹற்றன், கடுவல, நுகேகொட, ஹோமாகம, மினுவாங்கொட மற்றும் ரத்தினகல உள்ளிட்ட இடங்களில் இருந்தே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அவர் மேலும் கூறினார். இந்த முறைப்பாடுகள் தொடர்பாகத் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ஸ்ரீ-2-4)

## அரசாங்கம் வழங்கியுள்ள தீர்வு குறித்து திருப்தியடைய முடியாது

### விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் அரசாங்கம் வழங்கியுள்ள தீர்வு குறித்து திருப்தியடைய முடியாது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

விரிவுரையாளர்களுக்கு வழங்குவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்ட சம்பளத்துடன் நிபந்தனையுடன் கூடிய ஆய்வுக்கான கொடுப்பனவொன்று உள்ளடக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமை குறித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக உயர்கல்வியமைச்சின் செயலாளர் சுனில் நவரட்ன தெரிவிக்கையில், அரசாங்கம் பெற்றுக் கொடுத்த தீர்வுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் இணக்கம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கடல் முற்றுகைப் போராட்டத்தில் சுஷ்மா சுவராஜும் பங்கேற்பு

### பொன்.ராதா கிருஷ்ணன் தெரிவிப்பு

(சென்னை)

மீனவர்களைப் பாதுகாக்க வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் நடைபெறும் கடல் முற்றுகைப் போராட்டத்தில் 25 ஆயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர் என்று பா.ஜனதா கட்சி மாநில தலைவர் பொன்.ராதா கிருஷ்ணன் கூறினார்.

நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர், இந்திய தமிழ் மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசைக் கண்டித்தும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டு இருக்கும் இலங்கை அரசைக் கண்டித்தும் மீனவர்களைப் பாதுகாக்கக் கோரியும் தமிழக பா.ஜனதா கட்சி சார்பில் இராமேஸ்வரத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி கடல் முற்றுகைப் போராட்டம் இடம்பெறும்.

இதில் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ், அகில இந்தியத் தலைவர்கள் முரளிதரராவ், சதீஷ் ஆகியோர் கலந்து கொள்வதாக கூறியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த பா.ஜனதா கட்சியினர் ஆயிரம் பேர் கலந்து கொள்கிறாங்கள். இதேபோல் மாநிலம் முழுவதும் இருந்து 25 ஆயிரம் பேர் பங்கேற்கிறார்கள் என்றார். (ஸ்ரீ-2)

## தீயணைப்பு சேவை தற்காலிக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனத்தில் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மறு அறிவித்தல் வரை அதனது சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட பத்துப் பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோத இரத்தினபுரி கங்கையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 10 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த இடத்திலிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் 3 மோட்டார் ஸைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரத்தினபுரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ஸ்ரீ-2-4)

இறந்துபோனவனின் செருப்புகளுக்கு காத் திருப்பவன் வெறும் கால்களுடன் நடக்க வேண்டிவரும். -டேனிஸ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பச்சைத்தண்ணியில் பலகாரம் சுட்ட யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலகம்

தேர்தல் பணி என்பது மிகவும் முக்கியமான ஒன்று. தேர்தல் பணியில் ஈடுபடுபவர்கள் நடு நிலையோடு செயற்பட வேண்டும் என்பதற்கப்பால் தேர்தல் காரியங்களை உரிய நேரத்தில் உரிய வாறு செய்து முடிக்க வேண்டும் என்பதும் மிகவும் முக்கியமான விடயம்.

அந்த வகையில் யாழ்ப்பாணத் தேர்தல் தெரி வத்தாட்சி அலுவலகம், உள்ளூராட்சி சபைக் கான தேர்தலை நடத்துவதில் மிகவும் அர்ப்ப ணிப்புடன் செயற்பட்டதாயினும், தேர்தல் அறிவித் தல்களை வழங்குவதில் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

பொதுவில் எந்தத் தேர்தல் நடைபெறுவதாக இருந்தாலும் அதுதொடர்பான தேர்தல் அறிவித்தல் விளம்பரங்களை ஊடகங்கள் வாயிலாக வெளிப் படுத்த வேண்டும்.

ஆனால் யாழ்ப்பாணத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் எந்தவிதமான அறிவித்தல்களையும் வாக்காளர்களுக்குத் தெரியப்படுத்தவில்லை.

தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாளாகிய 22ஆம் திகதி தனியார் வானொலியொன்று தனது இரவுச் செய்தியில் வாக்களிக்கும் நேரம் காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை என அறிவித்திருந்தது.

உண்மையில் தேர்தல் வாக்களிப்பு நேரம் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை என்பதே சரியானதாகும்.

அப்படியானால் குறித்த வானொலியின் செய்தியைக் கேட்ட ஒருவர் மாலை 4 மணி 15 நிமிடத்திற்கு வாக்களிக்கச் சென்றிருப்பாரா யின் அவரால் வாக்களிக்க முடியுமா என்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

எனவே தேர்தல் தொடர்பாக வாக்காளர் அறிந்திருக்க வேண்டிய முக்கியமான அறிவித் தல்களை தேர்தல் திணைக்களம் தானே உரி மைகோரி ஊடகங்களில் விளம்பரம் செய்தி ருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இத்தகைய விளம்பரங்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ள போதிலும், இம்முறை அத்தகைய விளம்பரங்கள் எதுவும் வெளிவராமைக்கு தேர்தல் திணைக்களம் அல்லது யாழ்ப்பாண தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் பச்சைத்தண்ணியில் பலகாரம் சுட நினைத் ததே காரணம் எனலாம்.

நிதிப் பற்றாக்குறை இருப்பின் வாக்காளர்களின் நன்மை கருதி இலவச விளம்பரமாகக்கூட, யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் தேர்தல் அறி வித்தல்களை வெளியிட்டிருக்க முடியும்.

இதுதவிர தேர்தல் முடிவுகளின் போது விருப்பு வாக்குப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுவதிலும் பல தவறுகள் இடம்பெற்றுள் ளன.

விருப்பு வாக்குகள் பெற்றவர்களின் பெயர் விபரங்களை தெளிவாக எழுதாமை, பெயர் களைச் சரியாக எழுதாமை. எழுதப்பட்ட பெயர் களை சரிபார்க்காமை போன்ற தவறுகளால் விருப்பு வாக்குப் பெற்ற வேட்பாளர்கள் பலரின் பெயர்கள் ஊடகங்களில் தவறாக வெளியாகி பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

தேர்தல் பணிகளில் மிகவும் பற்றுறுதியோடு செயற்பட்ட யாழ்ப்பாணத் தேர்தல் தெரிவத் தாட்சி அலுவலகம் விருப்பு வாக்குப்பெற்ற வேட் பாளர்களின் பெயர் விபரங்களை வெளியிடு வதில் அதீத கவனம் செலுத்தாமை, ஆர்வத் தோடு வாக்களித்த மக்களின் மனங்களைப் பாதிக்கவே செய்தது.

# விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு வெற்றி பெற்றுள்ள உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு விருப்பு வாக்கு களின் அடிப்படையில் தலைவர்களை நியமிப்பதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜ யந்த குறிப்பிடுகின்றார்.

விசேட சந்தர்ப்பம் தவிர்ந்த வேறு எந்த விதமான காரணங்களின் அடிப் படையிலும் இந்த கொள்கையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என்று அமைச்சர் சுட்டக்காட்டியுள்ளார்.

பொதுவாக விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே கூட்டமைப்பு சார் பான உள்ளூராட்சி மன்றங்களுக் கான தலைவர்கள் நியமிக்கப்பட்டு வரு வதாக அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பாக உறுப்பினர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் விபரங் கள் உத்தியோகபூர்வமாக இன்னும் ஓர் இரு தினங்களில் கிடைக்கவுள்ளதாக அமைச் சர் குறிப்பிட்டார்.

இதன்பின்னர் தேர்தல் ஆணையா ளரால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலை வர்களின் பெயர் விபரங்கள் அனுப்பிவைக் கப்படும் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அரசுக்கு மக்கள் கொடுத்த தீர்ப்பை தமிழின வரலாறு என்றும் மறக்காது

## சிறிதரன் எம்.பி. அறிக்கை

(கொழும்பு)

அரசுக்கு மக்கள் கொடுத்த தன் மான உணர்ச்சி மிகுந்த தீர்ப்பை தமி ழின வரலாறு இன்றும் மறக்காது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

சர்வதேசமே எதிர்பார்த்த உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கின்றது. தேர்தல் களத்தில் தமிழர்படை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மிகப்பெரும் வெற்றியை பெற்று விட்டது.

நேற்று எங்கள் தெருக்களில் எக் காளமிட்டவர்கள் இன்று தலை குனி ந்து தடுமாறுகிறார்கள் தமிழர்களின் நாடித்துடிப்பின் அர்த்தங்கள் புரிந்து கொள்ளாது தாம் ஆடிய நாடகங்கள் அம்பலப்பட்டிருப்பது கண்டு குறுகிப் போய்விட்டார்கள்.

தமிழர்களின் தேசியக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்மானத் தமிழர்களாகிய நீங்கள் தந்த தன்மா னத்திற்கான தீர்ப்பால் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

குறிப்பாக போரால் உயிரிழந்து, சொத்திழந்து, அகதிவாழ்வை சுமந்து சிறையில் தங்கள் உறவுகள் இருக்க வதைபட்டு காணாமல் போன உறவு களைத் தேடி இன்னும் அலைந்தும், நலிந்தும் வாழும் எங்கள் உறவுகளா கிய உங்களை வெறும் பருப்புக்கும், சீனிக்கும் நீர் இறைக்கும் இயந்திரங் களுக்கும், துவிச்சக்கர வண்டிகளுக் கும் சில காசுத் தாள்களுக்கும் விலை பேசியவர்களுக்கு நீங்கள் கொடுத்த தன்மான உணர்ச்சி மிகுந்த தீர்ப்பை என்றும் தமிழின வரலாறு மறக்காது.

நீங்கள் மிகச் சிறந்த ஜனநாயகப் போராளிகள் நீங்கள் மிகச்சிறந்த நீதி வான்கள், நீங்கள் மிகச்சிறந்த வரலாற்று மாந்தர்கள் உங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கை கூப்பி உங்கள் பாதார விந்தங்களைத் தொட்டு வணங்குகின் றது.

உங்களுக்காக உங்களோடு உங் களால் வாழ்வதை நினைத்து நாம் மிகப் பெருமிதம் கொள்கிறேம். உங்களை மக்களாக பெற்றதற்கு இந்த மண் பெரு மைப்படுகின்றது.

சுடச்சுட செழுமை பெறும் தங்கம் போல அடக்கஅடக்க மிதிக்க மிதிக்க தமிழ் இனத்தின் தன்மான உணர்ச்சி மெரு கேரும். நீறுபூத்த நெருப்பாய் இருந்த தாகத்தை தமிழர்களே! தக்க தருணத்தில் தீர்த்தீர்கள். நன்றியென்றுள்ளது. (ஏ)

# தேர்தலில் கிடைத்த வெற்றி தமிழ் இனத்திற்கு கிடைத்த வெற்றி

## சரவணபவன் எம்.பி. அறிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத்தேர்தலில் தமிழ்மக்கள் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்புக்கு அமோக வெற்றியை வழங்கி யுள்ளனர்.

இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல, முழுத் தமிழ் இனத்திற் கும் கிடைத்தவெற்றி. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. நிபுணர் குழுவாலும் சர்வ தேச நாடுகளாலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றச்சாட்டப் பட்டிருக்கும் ஜனாதிபதி, தமிழ்மக்கள் தங்கள் பின்னால் நிற்பதாக காட்ட இத் தேர்தலை பயன்படுத்த முனைந்தார்.

எங்கள் பிரச்சினைகளை நாங்கள் தீர்ப்போம். வெளியாள் தலையீடுகள் தேவையில்லை என ஜனாதிபதி வடக் கின் பிரசார கூட்டங்களில் பிரகடனம் செய்தார். அது வெளிநாடுகளின் தலை யீட்டை தமிழர்கள் எதிர்க்கிறார்கள் என் பதை தமிழர்களின் வாக்குகளாலேயே காட்ட முயன்றதான ஏமாற்று வித்தை.

ஆனால்தமிழ்மக்கள்ஏமாறவில்லை. எமது தேசியம், எமது சுய நிர்ணயம் என் பவை தொடர்பாக தமிழ் மக்கள் உறுதி யுடன் நிற்கிறார்கள் என்பதன் வெளிப் பாடுகள்தான் இத்தேர்தல் முடிவுகள்.

இந்த வெற்றிக்கு வித்திட்டு தமிழ்த் தேசியத்தை ஒற்றுமையுடன் உலகுக்கு காட்டியுள்ள எமது மக்களுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

இதேவேளை இந்த வெற்றிக்கு நாம் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு எதிர்வு கூறும் நடவடிக்கையில் எம்முடன் இணைந்து பங்காற்றிய ஊடகங்கள், ஊடக நண்பர்கள் மற்றும் அனைவருக் கும் நன்றியைத் தெரிவித்தக்கொள்கின் றேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உங்களின் வெற்றி எம்மை அடக்குபவர்களும் அவர்களுக்கு அடி வருடும் கூட்டத்துக்கும் கிடைத்த தோல்வி. எனவே இந்த தேர்தல் தமிழ் மக்களின் வெற்றி என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் இவ்வாறு அவ் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## மன உறுதியுடன் இருங்கள்

ஒவ்வொரு மனித இதயத்தினுள்ளும் மிக ஆழத்தில் ஆதி அந்தம் இல்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவனை உணர் ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

தன்னுடைய பலவீனங்கள் ,குற்றங்கள் , பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்கு காரணம்.

எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது.உண்மையை நாம் உணர மேண்டுமானால் தீவிரமாக சிந்திக்க வேண்டும்.அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

உங்களுக்கு பிடித்ததை கடைப்பிடிப்பது போல மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தை கொடுங்கள். ஏனென்றால் சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து பாருங்கள்.கொண்ட கொள்கை மற்றும் குறீக் கோளில் மனவுறுதியுடன் இருங்கள்.

# மாநில முதல்வரைச் சந்திக்க மாடிப்படி ஏறி வந்தார் ஹிலாரி

எந்த வெளிநாட்டுத் தலைவர் இந்தியா வந்தாலும் டில்லிக்கு அடுத்தபடியாக வர்த்தகத் தலைநகர் என்ற வகையில் மும்பைக்கும் தென் இந்தியா என்ற வகையில் சென்னைக்கும் வருவது வழக்கம். ஆனால், இன்ஃபோசிஸ், விப்ரோ போன்ற ஐ.டி. நிறுவனங்கள் பெங்களூரில் குவிந்ததும் நிலைமை மாறியது. இங்கிலாந்து, சிங்கப்பூர், சீனா, ஜப்பான் தொடங்கி நைஜீரியா ஜனாதிபதியாக இருந்தாலும் இந்தியா வந்தால் டில்லிக்கு அடுத்தபடியாக பெங்களூரு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

சர்வதேச தலைவர்களின் பார்வையில் இருந்து சென்னை மறைந்தே போனது. அப்படிப்பட்ட நிலையில் ஹிலாரியின் இந்திய சுற்றுப்பயணத்தில் சென்னை இடம்பிடித்தது எப்படி?

இந்தக் கேள்விக்கு பிசினஸ் வட்டாரத்தில் சொல்லப்படும் பதில் இதுதான். ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்சியில் ஆட்டம் காணத் தொடங்கிய அமெரிக்கப் பொருளாதாரம் இன்னமும் சீரடைவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. வேலை இல்லாத் திண்டாட்டம் நீடிக்கிறது.

நம் வேலைகள் எல்லாம் பெங்களூருவுக்கு ஏற்றுமதி ஆவதால்தான் இந்த நிலைமை! என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அங்கே புகார் சொல்லிக் கொண்டு இருக்கிறார். இந்த நிலையில் ஒபாமாவின் வெளியுறவுத் துறை அமைச்சரான ஹிலாரி பெங்களூர் போவது சரியாக இருக்காது என்பதால்தான் சென்னை தேர்ந்து எடுக்கப்பட்டது.

கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இருந்தே இந்தியாவுக்கு அடிக்கடி வந்து போகும் ஹிலாரியின் மீது நம் நாட்டு மக்களுக்கு ஒருவித ஈர்ப்பும் பிரமிப்பும் உண்டு. இந்தியாவின் நலம் விரும்பி என்ற அடையாளங் கொண்டவர். முன்னாள் ஜனாதிபதியின் மனைவி என்ற அந்தஸ்தோடு நின்று விடாமல் நியூயோர்க் பிரதேசத்தின் எம்.பி., ஜனாதிபதி வேட்பாளரை முடிவு செய்வதற்காக நடைபெற்ற ஜன நாயகக் கட்சி தேர்தலில் போட்டியிட்டவர் என்று ஹிலாரிக்கு பல முகங்கள். பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களில் அக்கறை கொண்டவர்.

தொட்டில் குழந்தைத் திட்டம், அனைத்து மகளிர் பொலிஸ் நிலையம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் போன்ற திட்டங்களோடு அடையாளப்படுத்தப்படும் ஜெயலலிதாவை ஹிலாரி சந்திப்பது அவரது இமேஜுக்கு ஏற்றதாக இருக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் நினைத்ததும் முக்கியகாரணம்.

ஹிலாரி தங்கள் மாநிலத்துக்கு வருகிறார் என்று சொன்னால் வேறு எந்த மாநில முதல்வராக இருந்தாலும் சற்று ஓவராகவே உணர்ச்சி வசப்பட்டு எங்கள் மாநிலத்தில் கம்பனிகளை முதலீடு செய்யச் சொல்லுங்கள் என்ற விண்ணப்பத்தோடு விமான நிலையத்துக்கே சென்று வரவேற்று இருப்பார்கள் அல்லது குறைந்த பட்சம் சோனியா காந்தி மாதிரி வாசலுக்குச் சென்றாவது வரவேற்பார்கள். தமிழ் நாட்டில் அதுவும் ஜெயலலிதாவிடம் அந்த மாதிரியான அபரிமிதமான மரியாதையை எதிர்பார்க்க முடியாது. அதனால் தான் ஹிலாரி பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் கோட்டைக்குச் சென்று மாடிப்படி எறி முதல் தளத்துக்குப் போய் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்தார்.

இஸ்லாமியர்களுக்கு இணக்கமானவர்களாக தங்களைக் காட்டிக் கொள்வதில் அமெரிக்கா மிகவும் கவனமாக இருக்கிறது. அதை



கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற ஹிலாரியின் நிகழ்ச்சியிலும் பார்க்க முடிந்தது.

இஸ்லாமியர்களால் நடத்தப்படும் கல்லூரிகள் முதல் இஸ்லாமியப் பெண்கள் வரை பலருக்கும் அழைப்பு. பி.ஜே.பி.ஐச் சேர்ந்த லலிதா குமாரமங்கலம் , சுகுமாரன் நம்பியார், தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் பூங்கோதை மற்றும் கலை உலகின் சார்பாக கமல், கௌதமி, சிவாஜியின் மூத்த மகன் ராம்குமார் ஆகியோரைக் காண முடிந்தது.

மெடிக்கல் டூரிஸம் வளர வேண்டும் மற்றும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு நிறையப் பேர் வர வேண்டும் என்று குரல் கொடுக்கும் அப்பலோ மருத்துவமனையின் பிரதாப் ரெட்டி குடும்பத்தோடு வந்திருந்தார்.

வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளின் பயிர் செய்குவோம் என்ற பாரதியின் கனவைத்தாண்டி சென்னையில் உற்பத்தியாகும் பொருட்களை பாகிஸ்தான் மற்றும் சீனா வழியாக எடுத்துச் சென்று கஜகஸ்தானில் விற்பனை செய்யக்கூடிய சூழல் வர வேண்டும் என்பதே தனது கனவு என்று சொல்லி கைதட்டலை அள்ளினார் ஹிலாரி.

பொருளாதார சீர்திருத்தங்களால் ஒரு மாநிலம் எந்த அளவுக்கு முன்னேற முடியும் என்பதற்கு தமிழ் நாடு தான் உதாரணம் என்று ஜெயலலிதாவுக்கு ஐஸ் வைக்கவும் தவறவில்லை ஹிலாரி.

பி.ஆரோக்கியவேல்

# நான்காயிரம் அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவில் குடியுரிமை

புகலிடக் கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் வருடங்களில் அவுஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவதென அவுஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கிடையில் நேற்று ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் அவுஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவதெனவும் மேலதிகமாக தங்கியுள்ள 800 பேரை மலேசியாவுக்கு அனுப்புவதெனவும் ஒப்பந்தத்தினூடாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியவில் குடியுரிமை பெறுவோர் அனைவரும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தோர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மலேசியாவின் உள்துறை அமைச்சர் ஹிஷாமுடீன் உசைன் மற்றும் அவுஸ்திரேலியாவின் குடிவரவு, குடியகல்வுத்துறை அமைச்சர் கிரிஸ்போவன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

மலேசியாவில் புகலிடக் கோரிக்கையை முன்வைத்து 93 ஆயிரம் அகதிகள் உள்ளதாகவும் இவர்களில் இலங்கையரும் உள்ளடங்கியுள்ளனர் எனவும் சர்வதேச அமைப்புகள் தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ-2)



பங்களாதேஷின் தலைநகர் டாக்காவுக்கு சென்றுள்ள இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை அந்நாட்டு பிரதமர் ஹசீனா மற்றும் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் டிபு மோனி ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# மட்டு. சிறைக்கைதிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் முன்வைத்த சில கோரிக்கைகள் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் நடைபெற்றது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பி.அரியநேந்திரன் மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் ஹப்பு ஆராய்ச்சி, மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் ஏ.கீத்சிறி பண்டார உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் முன்வைத்த ஒவ்வொரு பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

சிறைச்சாலையிலுள்ள தண்ணீர்ப் பிரச்சினையை தீர்த்து வைப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். இதற்குத் தேவையான தண்ணீரை பவுசர் ஒன்றின் மூலம் வழங்குவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை இங்குள்ள கைதிகள் தாக்கப்படும் சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாது என சிறைச்சாலை நிர்வாகம் இதன் போது உறுதியளித்தது. இங்கு 36 தமிழ் அரசியல் கைதிகள் இருப்பதாகவும் அவர்களை வேறான இடத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.

இதேபோன்று இச்சிறைச்சாலையிலுள்ள வைத்தியசாலையில் சிறைச்சாலை நிர்வாகம் கட்டில்களைப் போட்டுக் கொடுப்பதெனவும் அதற்குத் தேவையான மெத்தைகள் மற்றும் மின்விசிறிகள் என் பவற்றை நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டதாக செல்வராசா எம்.பி தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலர் சில கோரிக்கைகளை முன்வைத்து சிறைச்சாலையின் கூரையின் மேல் ஏறி உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மரங்கள், அரிவு மரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இதில் பாலை, முதிரை, யாவறணை, காட்டாமணக்கு போன்ற மரங்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெற்றுக் கொள்ள விரும்புவோர் 021 2285409(கிளிநொச்சி), 0212220278 (யாழ்ப்பாணம்) போன்ற தொலைபேசி எண்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என கிளிநொச்சி அரச அதிபர் மரக்கூட்டுத்தாபன பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ஸ்ரீ)



லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் 2000 வது டெஸ்ட் போட்டி நடந்தது. இதை கௌரவிக்கும் வகையில் இந்தியா,இங்கிலாந்து அணிகளின் முன்னாள் அணித்தலைவர்கள் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம். இதில் இந்தியாவின் கவாஸ்கர்,கங்குலி மற்றும் ரவி சாஸ்திரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பார்முலா1 கார்பந்தயம்; ஹமில்டன் வெற்றி



இந்த ஆண்டுக்கான பார்முலா1 கார்பந்தயம் உலகம் முழுவதும் 20 சுற்றுக்களாக நடந்துவருகிறது இதன் 10 வது பந்தயமாக ஜேர்மனி கிராண்ட் பிரி நுயர்பர்கிரிங் ஓடுகளத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

போட்டிக்கான பந்தய தூரம் 308 கி.மீ(60 சுற்று) ஆகும். களத்தில்வழக்கம் போல் 24 வீரர்கள் பங்கேற்றனர். இதில் இங்கிலாந்து வீரர் லிவிஸ் ஹமில்டன் (மெக்லரன் அணி) ஜெட் வேகத்தில் காரை செலுத்தி இலக்கை முதலாவதாக கடந்தார்.

ஒருமணி 37 நிமிடம் 30.334 வினாடிகளில் பந்தய தூரத்தை எட்டிய அவர் இந்த சீசனில் பெற்ற 2 வது வெற்றி இதுவாகும். இதன்மூலம் அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தன.

முன்னாள் சம்பியனான ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ அலோன்சா (பெராரி அணி) 2 வது இடமும், அவுஸ்திரேலியாவின் மார்க் வெப்பர் (ரெட்புல் அணி) 3-வது இடமும் பிடித்தனர்.

நடப்பு சம்பியனும்,உள்ளூர் நட்சத்திரமும் ஆன ரெட்புல் அணி வீரர் செபாஸ்டியன் வெட்டல் ஏமாற்றத்துக்குள்ளானார். அவருக்கு 4 வது இடமேகிடைத்தது. இந்த சீசனில் அவர் டாப்-3 ஐ விட்டு பின்தங்கியது இதுவே முதல் முறையாகும்.

இந்தியதொழிலதிபர்விஜய்மல்லையாவை உரிமையாளராகக் கொண்ட போர்ஸ் இந்திய வீரர் அட்ரியன் சுதில் ஜேர்மனிஆறுதல் அளிக்கும் வகையில் ஆறாவது இடம்பிடித்து அணிக்கு 8 புள்ளிகள் பெற்றுத்தந்தார்.

இந்த ஆண்டில் முதல்முறையாக களமிறங்கிய சென்னையைச்சேர்ந்த கருண் சந்தோக்கால் லோட்டஸ் அணி 20வது இடமே பிடிக்கமுடிந்தது.

இதுவரை நடந்த 10 சுற்றுக்கள் முடிவில் செபஸ்டியன் வெட்டல் 216 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் மார்க் வெப்பர் 139 புள்ளிகளுடன் 2 வது இடத்திலும் ஹமில்டன் 134 புள்ளிகளுடன்மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

11-வது சுற்றுப்பந்தயம் வருகிற 31ம் திகதி ஹங்கேரியில் நடக்கின்றது.

# தகுதிச்சுற்று கால்பந்து;இந்தியா தோல்வி

2014-ம் ஆண்டுக்கான உலக கோப்பை கால்பந்து போட்டிக்கான ஆசிய கண்ட அணிகளுக்கான தகுதி சுற்று போட்டியில் அபுதாபியில் நடந்த ஆட்டத்தில் இந்தியா -ஐக்கியஅரபு எமிரேட்ஸ் அணிகள் சந்தித்தன.

இந்த ஆட்டத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது. ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் இந்திய அணியின் பின்கள வீரர் தேபாத்ரா ராய், எதிரணி வீரரை விதிமுறையை மீறி தடுத்ததைத் தொடர்ந்து சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதற்காக அளிக்கப்பட்ட பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வீரர் ஹம்தான் அல் கமாலி கோல் அடித்தார்.

24-ஆவது நிமிடத்தில் இந்திய அணியின் கோல் காப்பாளர் சுபத்ரா பால் எதிரணி வீரரை விதிமுறைக்கு புறம்பாக தடுத்ததைத் தொடர்ந்து சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் வழங்கப்பட்ட பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வீரர் முகமத் அல் ஹெகி கோல் அடித்தார்.

24-ஆவது நிமிடத்திற்கு பின்னர் இந்தியஅணி9வீரர்களுடன்விளையாடும் நிலைக்கு தள்ளப்பட்டது. 80-ஆவது நிமிடத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 3-வது கோலை அடித்தது. இஸ்மாயில் ஹம்மாதே இந்தக் கோலை அடித்தார்.

இந்திய அணியினரால் கடைசி வரை கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. முடிவில் இந்திய அணி 0-3 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியிடம் தோல்வி கண்டது.

இந்தியா-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் இடையிலான 2-வது தகுதி சுற்று ஆட்டம் டெல்லியில் நாளை மறுதினம் நடக்கிறது.

# தலை வணங்குகின்றோம்

அடக்குமுறைகளுக்கும், அற்ப சலுகைகளுக்கும் தமிழினம் ஒருபோதும் பணிந்துவிடாது என்பதையும் சுயநிர்ணயம் எமது பிறப்புரிமை என்பதையும் தணியாத தாகத்துடன் வாக்களித்து எம்மினத்தைத் தலைநிமிர வைத்த வடகிழக்கு தாயக உறவுகளைத் தலைசாய்த்து வணங்குகின்றோம்.

எமது மண்ணில் போட்டியிட்ட பெரும்பான்மையான சபைகளை வெற்றிபெறக்கூடிய வகையில் நெறிப்படுத்திய எமது கூட்டமைப்பின் தலைமைக்கும் எமது கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, பச்சிலைப்பள்ளி வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டபோது உதய சூரியன் சின்னத்தை எமக்கு அளித்தது மட்டுமன்றி தேர்தல் பரப்புரைப் பணிகளிலும் பலம் தந்து அப்பிரதேசங்களில் தமிழர்களின் சுய ஆட்சி உருவாக உதவிய எமது பங்காளிக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்கட்கும் மிகுந்த நன்றிகள். எத்தனை சவால்களை எதிர்கொண்டபோதும் தமிழ்த் தேசியப் பற்றோடு தேர்தலை எதிர்கொண்ட வேட்பாளர்களுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் வாக்களித்த அன்புக்குரிய மக்களுக்கும் தார்மீகப் பலம் தந்து எம்மை வளப்படுத்தும் புலம்பெயர் உறவுகளுக்கும் தமிழக நெஞ்சங்களுக்கும் தலைசாய்த்து வணங்கி நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்களில் நாங்களாக இருந்து எங்களை இயக்குகின்ற எங்களோடு இருந்து எங்களுக்காக உயிர்தந்து கனவுகளோடு விழிமூடித் தூங்கும் எம் உறவுகளுக்கும் இவ்வெற்றியை காணிக்கையாக்குகின்றோம்.

**பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், வேட்பாளர்களும்,**
**அறிவகம்**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(அ-3848)

# கோபா அமெரிக்கா கால்பந்து பெரு அணிக்கு மூன்றாவது இடம்

கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் வெனிசுலாவை வீழ்த்திய பெரு அணி மூன்றாவது இடம் பெற்று ஆறுதல் அடைந்தது.


ஆர்ஜென்டீனாவில் கோபா அமெரிக்ககால்பந்துத்தொடர்நடந்தது. இதில் நடப்பு சம்பியன் பிரேசில், தொடரை நடத்தும் ஆர்ஜென்டீனா அணிகள் காலிறுதியுடன் வெளியேறின. இதன் அரையிறுதியில் தோல்வியடைந்த பெரு,வெனிசுலா அணிகள் மூன்றாவது இடத்திற்கான போட்டியில் மோதின. போட்டியின் தொடக்கத்தில் இருந்தே இரு அணிகளும் முன்னிலை பெற போராடின. இதில் பெரு அணியின் கியாரோ(42 வது நிமிடம்) தாமஸ் ரின்கான் (58 வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடிக்க,2-0 என முன்னிலை பெற்றது. தொடர்ந்து அசத்திய கியாரோ இரண்டாவது பாதியில் 64,89ஆவது நிமிடங்களிலும் கோல் அடித்து ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதற்கு பதிலடியாக வெனிசுலாவின் பெர்னான்டோ 77 வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இருப்பினும் போட்டியின் முடிவில் பெரு அணி 4-1 என்ற கோல்கணக்கில் அபார வெற்றிபெற்று 3 வது இடத்தைப் பெற்று ஆறுதல் அடைந்தது.



ஆர்ஜென்டினாவில் நடந்த கோபா அமெரிக்க கால்பந்து தொடரில், வெனிசுலாவை வீழ்த்திய பெரு அணி மூன்றாவது இடம் பெற்றது. இதற்கான பதக்கத்துடன் பெரு வீரர்கள்.

# காயமடைந்த காம்பீர் வைத்தியசாலைக்கு



இங்கிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் போது, இந்திய கிரிக்கெட் அணி வீரர் கௌதம் காம்பீர் காயமடைந்ததால் அவசரமாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும்போட்டியின்4-வது நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது மட் பிரையர் அடித்த பந்தொன்று களத்தடுப்பாளர் கௌதம் காம்பீரை தாக்கியது. அதையடுத்து அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு எக்ஸ்றே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இப்போட்டியின் போது உபாதைக் குள்ளான மூன்றாவது இந்திய வீரர் காம்பீர் ஆவார். வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் முதல்நாள் ஆட்டத்தின் போது காய மடைந்தார். இதேவேளை சச்சின் டெண்டுல்கர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில்முதல் இன்னிங்ஸில்துடுப்பெடுத்தாடியமை குறிப்பிடத்தக்கது.

# ஹர்பஜன் சிங்கை கிண்டல் செய்யும் சர்ச்சைக்குரிய விளம்பரம் நிறுத்தம்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சளர் ஹர்பஜன் சிங் ராயல் ஸ்டேக் விளம்பரத்திலும், இதன் போட்டி நிறுவனமான தொழிலதிபர் விஜய் மல்லையாவின் யு.பி. குழுமம் தயாரித்துள்ள மெக்டவல் விளம்பரத்திலும் இந்திய அணியின் தலைவர் தோனியும் நடித்தனர்.

இதில் தோனி தோன்றும் விளம்பரம் ஹர்பஜன் சிங்கையும், அவரது குடும்பத்தையும், சீக்கிய சமுதாயத்தையும்அவமானப்படுத்தும் வகையில் இருப்பதாகவும் இந்த விளம்பரத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் ஹர்பஜன் சிங்கின் தாயார் சார்பில் யு.பி.குழுமத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

சில நாட்கள் ஆலோசனைக்கு பிறகு சர்ச்சைக்குரிய அந்த விளம்பரத்தை திரும்பப் பெற விஜய் மல்லையா முடிபு செய்துள்ளார். அந்த விளம்பரம் மாற்றம் செய்து மீண்டும் வெளியிடப்படுமென்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.



சீனாவில் நடக்கும் உலக சாம்பியன்ஷிப் நீச்சல் போட்டியில், 4*100 மீ., பிரிவில் தங்கம் வென்ற மகிழ்ச்சியில் நெதர்லாந்து வீராங்கனைகள்.




# சரத் பொன்சேகாவுக்கு...

அழைத்து வரப்பட்ட சரத் பொன்சேகா, 50 சிறைச்சாலைக் காவலாளிகளினால் அழைத்துவரப்பட்டிருந்தார்.

இவர்களில் சில பொலிஸாரும் இருந்தனர். இதனைத் தவிர வழக்கு விசாரணை நடைபெற்றபோது 20 சிறைக் காவலர்கள் நீதிமன்றத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தனர்.

நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்படும் சரத் பொன்சேகா அங்கிருக்கும் ஊடகவியலாளர்களிடம் அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது வழமை. இதனைத் தடுப்பதற்காகவே அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (எ)

# சீமானை கைது...

இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் வில்லிவாக்கம் சுரேஷ், தமிழ்ச்செல்வன் உட்பட பலர் சென்றிருந்தனர். (எ)

# உள்ளூராட்சி சபைக்கு...

இம் மாதம் 27 ஆம் திகதியே கிடைக்கப்பெறும் என்றும் அது கிடைக்கப்பெற்றதும் தவிசாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை இத் தேர்தலில் வெற்றிபெற்றுத் தெரிவான உறுப்பினர்கள் அனைவருக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் சட்டங்கள், நடைமுறைகள், கேள்விப்பத்திர நடைமுறைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இப் பயிற்சியில் உள்ளடக்கப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல் ஆணையாளரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து ஒரு மாதத்திற்குள் உள்ளூராட்சி சபைகள் இயங்கத் தொடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)


# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்தம்பி கந்தசாமி (கப்பல்)

(பன்னாலை, தெல்லிப்பழை)



மண்ணில் 05 06 1949

விண்ணில் 25 07 2011

பாசத்திற்கும் பணிவிற்கும்
இலக்கணமாய்
இன்ப துன்பங்களைப் பகிர்ந்து
அன்புடன் எம்முடன் பழகினீர்
உம் நிரந்தர பிரிவால்
துன்பம் எனும் வலையில்
சிக்கித் தவிக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய ஸ்கந்தபுரம் இத்தியடி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*மணி ஐயப்பா நகைப் பூங்கா*

*உரிமையாளர், ஊழியர்கள் கந்தசாமி கோவில் முன்பாக ஏ-9 வீதி, கிளிநொச்சி.*

(தீ-3847)


# பேரா.சிவத்தம்பிக்கு அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் அமரர் கார்த்திகேசு சிவத்தம்பியின் அஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் தமிழ்த்துறையின் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (எ)

# மிகிந்தலைக்...

இதற்கிடையில் நேற்று முன்தினம் அனுராதபுரத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அங்கு நடைபெறவுள்ள 6 ஆவது தேசத்தின் மகுடம் கண்காட்சிக்கு நிகராக பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் முக்கிய இடம் வழங்குமாறு தெரிவித்தார். அனுராதபுரம் ஒயாமடுவ பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (எ)

# தமிழீழம் அமைக்க வாக்...

செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் சுமார் 22 ஆண்டுகளுக்குப் பின்பு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் விடுதலைப்புலிகளின் ஆதரவு பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழர்களின் தாயகமாம் வடக்கு கிழக்கு மாநிலங்களில் பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்துக்கு 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விடுதலைப்புலிகள் ஆதரவுடன் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 இடங்களில் வெற்றிபெற்றது.

தனித் தமிழீழமே தீர்வு என்று 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு பின்னர், 1977 ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் வடக்கு கிழக்கு மாநிலங்களில் ,90 வீத தமிழர்கள் அந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். அதேபோலத்தான் இப்போது உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தமிழீழ ஆதரவாளர்களையே தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். இது தமிழ் ஈழம் அமைவதற்கான முன்னோடித் தேர்தல் முடிபுகள் என்றே கொள்ள வேண்டும்.

எனவே உலக நாடுகளின் பார்வையாளர்கள் முன்னிலையில் தமிழ் ஈழம் அமைப்பதற்கான வாக்குப் பதிவை நடத்திட வேண்டும். அந்த வாக்குப் பதிவில் உலகின் பல நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள ஈழத்தமிழர்கள், அந்தந்த நாடுகளிலே வாக்கு அளிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இலங்கையில் தமிழ் இனக்கொலை நடத்திய ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டாளிகளை உலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் கூண்டில் நிறுத்தித் தண்டிப்பதற்கும் நடவடிக்கைகளை ஐ.நா.மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் என வைகோ கூறியுள்ளார். (எ-8)

# சிங்கள மக்களுக்கு இணை...

களின் சட்டவிரோத பயன்பாடு, இராணுவக் கெடுபிடி, திட்டமிட்ட வன்முறை ஆகியவற்றிற்கு மத்தியில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளார்கள். கூட்டமைப்பின் வெற்றியை முறியடித்து வடக்குக் கிழக்கில் கணிசமான வெற்றிகளைக் குவித்து, தமிழ் மக்கள் எங்களுடன்தான் இருக்கிறார்கள் என உலகிற்கு அறிவிப்பதற்கு இந்த அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்தது.

இன்றைய சர்வதேச சூழலிலே அரசாங்கம் முகம்கொடுக்கும் நெருக்கடிகளிலிருந்து இதன் மூலம் தப்பிவிடலாம் என அரசாங்கம் கணக்குப் போட்டது. இதற்காகவே முழுமையான அரசாங்க இயந்திரமும் வடக்கு மாகாணத்தில் முகாமிட்டு தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தது.

இந்த உண்மைகளை தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களும், நாங்களும் விளங்கப்படுத்தினோம். இப்பின்னணியிலேதான் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தெளிவான தீர்ப்பை இன்று வழங்கியுள்ளனர். தெற்கிலே சிங்கள மக்கள் வாழுகின்ற வாழ்க்கைநிலைமைகளுக்கு இணையான வாழ்க்கை எங்களுக்குத் தேவையென தமிழ் மக்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

எங்கள் கிராமங்களும், பிரதேசங்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் அபிவிருத்தி தொடர்பிலான முடிபுகளை நீங்கள் கொழும்பிலே இருந்து எடுக்காதீர்கள். அந்த அதிகாரங்களை எங்களிடம் தாருங்கள் எனத் தமிழ் மக்கள் அரசாங்கத்திடம் கூறியுள்ளார்கள்.

இந்தத் தீர்ப்பை இலங்கை அரசாங்கம் மதிக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தற்போது நடத்திக்கொண்டுவரும் பேச்சுவார்த்தையை அடுத்து அர்த்தமுள்ள தீர்வுகளை கொண்டுவருவதற்காக பயன்படுத்தவேண்டும்.

இனிமேலும் புலிகள் கேட்பதை கூட்டமைப்பு கேட்கக் கூடாது என்று தேவையற்ற குற்றச்சாட்டை சுமத்துவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும்.

புலிகளின் கோரிக்கைக்கும், இன்றைய கூட்டமைப்பின் கோரிக்கைக்கும் இடையிலான வேறுபாட்டை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய தருணம் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாகும் என்றார். (எ)

# சமாதானத்திற்கான போரில்...

ஒரு தேசம் என்ற வகையில் இலங்கை மக்கள் தோல்வி கண்டுவிட்டோம் என்பதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை நாம் கொண்டிருப்போம்.

எமது தவறுகளை ஒப்புக்கொள்வதற்கான நேர்மையும் திருத்தங்களை செய்வதற்கான பெருந்தன்மையும் எம்மிடம் இருக்க வேண்டும். உண்மைகளையும் காத்திரமான விமர்சனங்களையும் தொடர்சியாக நிராகரித்து வருவது எவ்வித பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது.

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான உயர்ந்த இலக்கிற்கு நாட்டின் தலைவர்கள் தலைமை தாங்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டமே இந்நாட்டின் மோதல்களுக்கு காரணமாகும். இலங்கையில் மொழிகளுக்கு இடையிலான சமத்துவம் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டதாலேயே சமஷ்டி மற்றும் தனிநாட்டு கோரிக்கைகள் எழக் காரணமாகவிருந்தது. 1958, 1977, 1980 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் 1983 ஆம் ஆண்டின் இனக்கலவரம் போன்றன சமாதானத்திற்கு ஆதரவான தமிழ் மக்களைக் கூட சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாட்டில் நீதியையும் சமவுரிமையையும் பெற்றுக் கொள்ள முடியாது என நம்பச் செய்தன.

சிறுபான்மை மக்களின் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 1972, 1978 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்புக்கள் தவறிவிட்டன. இலங்கையில் இடம் பெற்ற போரில் அரசாங்கம் வெற்றி கொண்டமை தொடர்பில் நானும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் நாம் போரில் வெற்றி பெற்றிருந்தாலும் சமாதானத்திற்கான போரில் இன்னமும் வெற்றி பெறவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கு ஏனைய மக்களையும் அரசாங்கத்தின் அனைத்து செயன்முறைகளிலும் முழுமையாகவும் நேர்மையாகவும் உள்ளடக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து தமிழ் சமூகம் வேறுபட்டது என்பதை அரசாங்கமும் சிங்கள சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் ஏனையோரைப் போன்றே இலங்கையில் சமத்துவமான பிரஜைகளாக வாழும் விருப்பத்தைக் கொண்டிருக்கின்றனர். ஐக்கிய இலங்கையில் சமத்துவமான உரிமைகளையும் வாய்ப்புக்களையும் கொண்டவர்களாக அவர்கள் சிங்கள மக்களுடன் வாழ விரும்புகிறார்கள். இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்ட மாகாணசபை முறைமையை வடக்குக் கிழக்கிற்கு ஏன் வழங்க முடியாது? சிறுபான்மை மக்களுடனும் அவர்களின் தலைவர்களுடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். எம்மிடமிருப்பதை பகிர்ந்து கொள்வதால் எமது பலம் குறைந்து விடப் போவதில்லை. மாறாக அது பிரிந்திருக்கும் சமூகங்களை ஒன்றிணைக்கும் என்றார். (எ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது